ஸர்வஜித் ௵
மாசி ௴

533

533

ஸம்புடம் - 7
ஸஞ்சிகை - 2

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 FEB 1948
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

JL
Q22m211,N41
N48.2.2.
189243

February 1948
Vol. 7 No. 2

விஷய ஸூசிகை.

				பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்		...	22
2.	ஸூக்தி ஸௌஹார்த்த விவேசநம்		...	27
3.	அபிந்ந நிமித்தோபாதாந பாவ விசாரம்		...	30
4.	செய்திகள்	...	...	33
5.	பஞ்சாங்க சங்க்ரஹம்	...	...	37
6.	மதிப்புரை	...	...	38
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	...	39
8.	வாஸந்திகா பரிணயம்			

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வஜித் ௵ மாசி ௴	ஸஞ்சிகை 2

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::0::

189243

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

வ்யவஸாயன்:--லக்ஷ்மியைத் திருமார்பில் தரிக்கும் பகவத் ரூபம் காண்பிக்கப்பட்டது. இப்பொழுது பூமியைத் தாங்கிக்கொண் டிருக்கும் அவதார ரூபத்தைக் காண்பிக்கிறேன்.

ப்ரள காலத்தில் பொங்கிப் பெருகும் ஸமுத்ரத்துள்ளிருந்து வெளியே கிளம்பும் இந்த ஆதி பூவராஹர் தம் கோரைப்பல் நுனியில், வராஹ க்ரீடைகளில் ஒட்டியிருக்கும் சேறுபோல் பூமியைத் தரித்துக்கொண்டு ஸேவை ஸாதிக்கிறார்.

ராஜா:—மிகப் பெரிதும், முன் அவதாரங்களிலும் மிக்க அத்புதமாயுமிருக்கிறது பூமியைத் தரிக்கும் இப்பர்வதாகார ரூபம். லக்ஷ்மீதர ரூபத்திலும் இந்தப் பூதர ரூபம் மிக்க ஆச்சர்யமானது. 'பூதர' என்பதற்குப் 'பூமியைத் தரிக்கும்' என்றும், 'பர்வதம்' என்றும் பொருள். இரண்டு பொருள்களும் இங்கே உண்டு. ரஹஸ்ய ஶிகாமணி என்னும் ரஹஸ்யத்தில், மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்களைக் காட்டில் இந்த அவதாரத்தின் உயர்த்தி விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. கீதை என்னும் அத்புதமான உபநிஷத்தைப் பாடிய கண்ணபிரானுக்கும் 'ஞானப்பிரான்' என்ற திருநாமமில்லை. இவருக்கே இத்திருநாமம் அஸாதாரணம். இவர் ஸேவை ஸாதிக்கையில் ருஷிகள், "வைராக்ய பக்திகளால் ஆத்மாவை வஶப்படுத்தி ப்ரஹ்மாநுபவ பாக்யத்தைப் பெறச் செய்யும் வித்யாகுரு வாகிய உமக்கு 'நம: நம: ஜிதம் ஜிதம்தே' என்று பல்லாண்டு பாடினார்கள்" என்று சுகர் பாடியுள்ளார், 'வித்யாகுரு' என்றும், அதிலும் 'ப்ரஹ்ம ஜ்ஞாநத்தை அநுபவ பர்யந்த மாக்கும் குரு' என்றும் அங்கே வர்ணநம். 'ஸர்வேஶா நா ஜகத:' என்றபடி, நித்ய ஸித்த ஜ்ஞாநமுடைய ஈச்வரி இங்கே, 'ஸாஹம் ஶிஷ்யா ச தாஸீ ச பக்தா ச தவ மாதவ' என்று கூறிக் கேட்டதால், இவர் உபதேஶத்தைக் கேட்ட ச்ரோத்ரு வைலக்ஷண்யம் காட்டப்பட்டது. அர்ஜுநன் நான்; இவள் ஈச்வரி. 'இப்புராண ப்ரவர்த்தகமான இவ்வவதாரத்துக்கு மான மிலாதாப்போலே உபமாநமுமில்லை. இவ்வவதாரத்தை மந்வாதி பரமாப்த பரிகணனையிலே தர்ம ஶாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் தாங்களே சேர்த்தார்கள். இப்படி வக்த்ரு வைலக்ஷண்யத்தாலே இப்புராணம் (வராஹ புராணம்) உத்க்ருஷ்டம் என்று ஶிகாமணி. இவர் உபதேசம், 'ப்ரஜா ஹிதார்த்தமாக மாதா கேட்க, ஸர்வபூத ஸுஹ்ருத்தான பிதா அருளிச் செய்த வார்த்தை.' இவனுடைய திருமேனியெல்லாம் வேதமயம்; யஜ்ஞமயம். இவர் ஜ்ஞாந யஜ்ஞ ஸாரத்தை இவர் சரம

ச்லோகங்களால் அருளியதற்கு விஸ்தாரமாக ஶிகாமணி ரஹஸ்யத்தில் விவரணம் அருளப்பட்டது. "சரம காலத்தில், காஷ்ட பாஷாணத்தைப்போல நினைவுக்கே யோக்ய மில்லாத காலத்தில் நம் யத்நத்தால் அந்திம ஸ்ம்ருதிக்கு அபேக்ஷையே கிடையா தென்றும், முதலில் நாம், 'நீயே கதி; உன் பரமே என் ஆத்ம க்ஷேமம்' என்று நினைத்த காலத்திலேயே நம் ஆத்ம ரக்ஷண பரத்தை ஏற்றுக்கொண்டு, 'அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்' என்று காட்டியபடி, சரம காலத்தைப்பற்றி அஞ்சல் அஞ்சல்; முன் நினைப்பையே பற்றுசாகக் கொண்டு நான் இது முதல் நித்யமாக உன்னை ரக்ஷித்துக் கொண்டு, கடைசியில் பரம கதியாகிய என் வீடு சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று அபய மளித்த ச்லோகங்கள் சரம ச்லோகங்களே. கீதா சரம ச்லோகம் ஒன்றே; இவர் சரம ச்லோகங்கள் த்வயம்.

[கூப்பிய கைகளோடு மயிர் சிலிர்க்க நாத் தழுதழுக்க:]

"𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌕𑍍𑌷𑍁𑌣𑍍𑌣𑍇 𑌪𑌲𑍍𑌵𑌲𑍇 𑌵𑌾𑌰𑌿𑌧𑌯𑍋𑌽𑌸𑍍𑌯 𑌜𑌾𑌨𑍁𑌦𑌘𑍍𑌨𑌾𑌃 ।
𑌵𑌹𑌤𑍇𑌽𑌧𑌿𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍇 𑌪𑍋𑌤𑍍𑌰𑌿𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥"

இந்த ச்லோகம் ரஹஸ்ய ஶிகாமணியில் மங்கள ச்லோகமாக வைத்துள்ளது. "நான்கு ஸமுத்ரங்களும் பொங்கிப் பெருகி, ஒரே ப்ரளயமாகி, பூமியுள்ளே முழுகிப் பாதாளம் வரையில் அழுந்தி விட்டது. இவ்வளவு மஹத்தான ப்ரளய ஜலத்தில் எங்கோ ஓரிடத்தில் மூழ்கிக் கிடந்த" என்பது இந்த ச்லோகத்தின் பொருள். கல்ப முடிவில் ஏகோதகமான ஸமுத்ர ப்ரளய ஜலத்தை, இங்கே '𑌪𑌲𑍍𑌵𑌲𑌃' என்று ஒரு சிறு குட்டையாக வர்ணித்திருக்கும் ரஸம் கவனிக்கத் தக்கது. வராஹங்கள் குட்டைகளில்தான் விளையாடும்; ஸமுத்ரத்தில் ஒருக்காலும் இறங்கமாட்டா. '𑌯𑌜𑍍𑌜𑌾𑌤𑍀𑌯𑍋 𑌯𑌾𑌦𑍃𑌶𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵' என்றபடி, எந்த யோனியிற் பிறந்தாலும் அந்த யோநியின் ஸ்வபாவத்தை அநுஸரித்தே நடப்பது அவதாரங்களின் ஸ்வபாவம். வராஹ நயினர் ஸமுத்ரத்தில் விளையாடலாமோ வென்றால், இவருடைய பர்வத ரூபத்திற்கு ஸமுத்ரம் ஒரு குட்டைபோலவே யிருந்தது.

'𑌵𑌾𑌰𑌿𑌧𑌯𑍋'—இவர் குளப்படி ஆழமே இவருக்கும் அந்த ஸமுத்ரம்; வராஹங்கள் குட்டைகளில் சேற்றில் விளையாடிக்கொண்டு கோரைக் கிழங்குகளைக் கடித்துத் தின்னும். அப்படித் தின்கையில் பல் இடுக்கில் கோரைக் கிழங்குத் துண்டு ஒட்டிக்கொண்டிருக்கும்; சேறும் ஒட்டிக்கொண்டிருக்கும். அதுபோல இவர் பல்லில் பூமி ஒட்டிக்கொண்டிருக்கிறது.

𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍇 𑌪𑍋𑌤𑍍𑌰𑌿𑌣𑍇 𑌨𑌮𑌃—இவர் அவதரிக்கையில், ஜநோலோகம் தபோலோகம் ஸத்யலோகம் ஆகிய இந்த லோகங்களிலுள்ள ஸித்தர்கள் ருஷிகள் முதலியோர் நமஸ்கரித்துப் பல்லாண்டு பாடினார்கள். ஸ்வாமியும் விவேகராஜர் பேச்சாக இவர் அவதாரத்தை ஸேவித்துத் துதிக்கிறார்.

"𑌗𑍋𑌪𑌾𑌯𑍇𑌦𑌨𑌿𑌶𑌂 𑌜𑌗𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌹𑌨𑌾𑌪𑍋𑌤𑍍𑌰𑍀 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌕𑍃𑌤
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌲𑌯𑍋𑌰𑍍𑌮𑌿𑌘𑍋𑌷𑌗𑍁𑌰𑍁𑌭𑌿𑌰𑍍𑌘𑍋𑌣𑌾𑌰𑌵𑍈𑌰𑍍𑌘𑍁𑌰𑍍𑌘𑍁𑌰𑍈𑌃।

யத்³த³ம்ஷ்ட்ராங்குரகோடிகா³ட⁴க⁴டநா நிஷ்கம்ப நித்யஸ்தி²தி:
ப்³ரஹ்மஸ்தம்ப³மஸௌத³ஸௌ ப⁴க³வதீ முஸ்தேவ விஶ்வம்ப⁴ரா ॥ ”

இந்த ச்லோகம் தஶாவதார ஸ்தோத்ரத்திலும் உள்ளது. [அநிஶம்—எக்காலத்திலும், ஜக³ந்தி—எல்லா உலகங்களையும், ப்ரளயோர்மிகோ⁴ஷகு³ருபி⁴:—ப்ரளய காலத்தில் அலைக்கும் கடலோசைகளால் இன்னும் பெரிதாக்கப்பட்ட, கு⁴ர்கு⁴ரை:— குர்குரு வென்ற, கோ⁴ணாரவை:— மூக்கின் உறுமல் த்வனிகளால், பவித்ரீக்ருதப்³ரஹ்மாண்ட³:—பரிசுத்தமாக்கப்பட்ட ப்ரஹ்மாண்டத்தையுடைய, குஹநாபோத்ரீ—வராஹ வேஷப் பெருமாள், கோ³பாயேத்—ரக்ஷிக்க வேணும்; யத்³த³ம்ஷ்ட்ராங்குரகோடிகா³ட⁴ க⁴டநா நிஷ்கம்பநித்யஸ்தி²தி:—எவருடைய பல்லின் முனையின் நுனியில் கெட்டியாக ஒட்டி வஹிக்கப்படுவதால் இனி எந்த அஸுரரும் அசைக்க முடியாத நிலையான இருப்பை யடைந்து, அஸௌ ப⁴க³வதீ விஶ்வம்ப⁴ரா—உலகத்தை யெல்லாம் தனக்குள் வைத்துத் தாங்கும் இந்த ஈச்வரியான பூமிதேவி, முஸ்தேவ ஸ்தம்ப³ம்—கோரைக் கிழங்கு கோரைப் பல்லைப் பெறுவது போல (முளை விடுவதுபோல) 'ப்³ரஹ்மஸ்தம்ப³ம்—ப்ரஹ்மா முதல் புல் பூண்டு வரையில் (புழுவரையில்) உள்ள எல்லா ப்ராணிகளையும், அஸூத—ப்ரஸவித்தாள்.] [பூமி தேவியின் கர்ப்பத்தில் எல்லா ப்ராணிகளும் இருந்து, அத்தாயார் கர்ப்பத்திலிருந்து எல்லாம் வெளிவருகின்றன. பூமித் தாயார் தன் கர்ப்பத்திலிருந்து ப்ரஹ்மா என்னும் உயர்ந்த ஜீவர் முதல் புல் பூண்டு ஈருக எல்லா ப்ரஜைகளையும் பெறுகிறுள்.] பூமி, பாதாளம் வரை கீழே தள்ளிக் கிடந்தது. அந்தத் தேவியை வராஹ நயினர் தம்முடைய கோரப் பற்களால் கவ்வித் தூக்கி உத்தரணம் செய்தார். அத்தேவியின் கர்ப்பத்தில் ப்ரஹ்மாண்டத்திலுள்ள ப்ராணிக ளெல்லாம் இருந்தனர். இத்தனை ப்ராணிகளையும் கர்ப்பத்தில் தரித்துள்ள பூமிதேவி, இவர் பல்லிடுக்கில் ஆடாத அசங்காத நிலையைப் பெற்றிருந்தாள். இவள் கர்ப்பிணீ; விச்வ கர்ப்பிணீ. கர்ப்ப ஸ்த்ரீகளுக்கு ஆட்டம் அசைவு கொடுக்கும் வாஹநங்களே கூடா. இவர் பல்லிடுக்கில் இவளுக்குக் கெட்டியான கடையாய், நிஷ்கம்பமான இருப்புக் கிடைத்தது. அங்கிருந்தே இவள் இத்தனை உலக ப்ராணிகளையும் ப்ரஸவிக்கும் படி அப்படி அசஞ்சலமான நிலை அங்கே இவளுக்குக் கிடைத்தது என்று ரஸம். த³ம்ஷ்ட்ராங்குரம்—பல் முளை. அதன் கோடியில் நுனியில். கா³ட⁴ க⁴டநா-கெட்டியாகக் கவ்வி ஒட்டியிருப்பதால். நிஷ்கம்பநித்யஸ்தி²தி:—என்றும் அசங்காமல் இருப்பைப் பெற்றவளாய்; 'ஜக³ந்தி' என்பதால் பல போகத்தோடும் இவரைத் துதித்து ரக்ஷை பெற்றது காட்டப்படுகிறது. குஹநாபோத்ரீ—இவருடைய ஶரீரம் வேஷமே. பவித்ரீக்ருதப்³ரஹ்மாண்ட³—இவர் இந்த ரூபமாக அவதரிக்கையில் எங்கே இவரை ஜநங்கள் அவமதிப்பரோ வென்று பயந்து, ஜநஸ் தபஸ் ஸத்யலோக நிவாஸிகளான முனிகள் எல்லாரும் மூன்று தரம் 'பவித்ரம்' என்னும் ஶப்தத்தை உச்சரித்தார்கள். ப்³ரஹ்மஸ்தம்ப³ம்—ப்ரஹ்மா முதல் புல்வரையில் உள்ள எல்லா ப்ராணிகளையும். 'ஸம்ஸரணாவலி' என்று பூர்வஸ்துதி.

“ ஜநஸ்தப: ஸத்யநிவாஸிநஸ்து
த்ரிபி: பவித்ரைர் ஜக³துர்நயோட³ரணாக்ஷ ”

என்பது ஸ்ரீ பாகவதம். போத்ரியாலே ப்ரஹ்மாண்டம் பவித்ர மாக்கப்பட்ட தென்பதால், ஸ்ரீ பாகவத ச்லோகம் குறிக்கப்படுகிறது 'ஸ தந்நஹாவஹணம் சுழும் வவித்ரு' என்று சுகர், இவர் கதையைக் கேட்பதே மிகப் பவித்ரமெனப் பாடினர். 'மஹாஸ:' என்பது இங்கே, 'சப்தம் மிகப் பெரிதாயிற்று' என்று கூறுவதோடு, ஶப்த ஶக்தியால் இவர் 'வித்யாகுரு' 'ஞானப் பிரான்' என்று சுகர் பாடியதையும் த்வநியால் குறிக்கும். ஹயக்ரீவருடைய ஹேஷார வங்கள் போல் இவர் கோணாரவங்கள்.

189243 600 008

[பூமி தேவியை நமஸ்கரித்து]

" வஸுவஷம் வராஹவவஷாவஷோத்தெ ந
வீதெந ஹொமிவஸெ ஸஹஷீக்ஷிதாயா:
வாஹா ஹதா: வூஜயவாமியயதூவாஸ
ஞஷ்வூஹஸம ஹஜவியெரஷிதா வூஷம்ஹா: ॥ "

இது பூஸ்துதியில் பதினைந்தாவது ச்லோகம். பூமி தேவியை வராஹப் பெருமாள் உத்வாஹம் (மேலே தூக்குதல்) செய்தார்.

" உஜூதாவிவராஹெண கூஷெணநஶதவஹிணா "

என்று வேதம் இதைப் புகழ்ந்தது. க்ருஷ்ண ஶப்தம் பகவானுக்கு நாராயண வாஸுதேவ நாமங்களைப் போல வ்யாபக நாமம் என்பது ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகை. இவருடைய அதிஸுந்தரமான இத்திருமேனியால் பூதேவின் மநஸ் ஆகர்ஷிக்கப்பட்டதையும் இந்த க்ருஷ்ண பதம் வ்யஞ்ஜநம் செய்யும். பாதாளத்தில் அழுந்தி யிருந்தவளை மேலே உத்வஹநம் செய்ததை, உத்வாஹ மெனும் விவாஹம் போல் ச்லேஷையால் பாடுகிறார். ப்ரணவத்தில் நடுவெழுத்தான உகாரம் லக்ஷ்மியைச் சொல்வதற்கு, அவள் அம்ஶமான பூமி தேவியை உத்தாரணம் செய்தது நிமித்தமென்று ப்ரணவப் பொருளை நிர்வசநம் செய்யும் ச்ருதி பணித்தது.

' சுஷெரூஶா நா ஜமதொ விஷ்ணு வத்நீ '

என்ற ச்ருதியும் இவள் விஷயமே. 'பத்நீ' என்னும் ஶப்தம் யஜ்ஞங்களில் கூட அந்வயிப்பதைக் காட்டுகிறது. இவர் திருமேனி முழுவதும் யஜ்ஞாவயவ மயம். இவருடைய கெட்டி ஆலிங்கநத்தில் இவளுக்கு யஜ்ஞ ஸம்பந்தத்துக்குக் கேட்கவேண்டுமோ? 'வத்யுநெஷயஜ்ஞஸமயொமெ' என்பது பாணிநீ ஸூத்ரம். 'ஸவஷயஜ்ஞஷயம் வவஷ:' என்பது இந்த வராஹப் பெருமாளுக்கே தகும். புருஷ ஸூக்தத்தில் காரண விச்வ புருஷனை வர்ணித்து விட்டு, அடுத்த அநுவாகத்தில் 'பூமிதேவியும் லக்ஷ்மீதேவியும் உம்முடைய பத்நிகள்' என்று கிட்ட நெருங்கி நேரில் கூப்பிட்டு ச்ருதி பேசிற்று. இப்பத்நிகளை காணும் வரையில் 'அவர் அவர்' என்று பரோக்ஷமாகவே பேசிற்று.

பூர்வம் முன்பு கல்பாரம்பத்தில் 'வராஹவவஷா வஷோத்தெ ந' என்ன யோநியாய்ப் பிறந்தா லென்ன? அவன் ஸர்வ புருஷர்களிலும் உத்தம

ஞன ஸர்வேச்வரனே. "ஜஹௌ வராஹவபுஷ: பரிரம்பணேந" என்று
ராஸ க்ரீடாத்யாயங்களில் கோபிகள் ஆசைப்பட்டுப் பாடிய வராஹத் திரு
மேனியினுல் பூமிதேவி பெற்ற ஆலிங்கன ஸந்தோஷத்தை நினைப்பூட்ட இங்கே
'வராஹவபுஷா' என்று படித்தது. ஹாடகஸத்மநி—பாதாள லோகமாகிய
நாக லோகத்தில்; ஸ்ம்ருதேந ஸம்வீக்ஷிதயா—ஆநந்தப் பூரிப்புடன் தாமரைக்
கண்களால் காதல் மிகப் பருகப்பட்ட. அவள் கிடந்த இடத்திற்கு இவர் வந்து
அவளைக் கண்களால் பருகினுர். பாதாள உலகிற்குத் தன்னிடம் வந்த வராஹ
நயினுரைக் கண்களார வீக்ஷணம் செய்து, 'நமஸ்தே புண்டரீகாக்ஷ' என்று
தொடங்கித் துதித்தாள். 'நீர் உலகத்துக்கே தகப்பன்; எங்கள் தாயான உம்
பத்நியை ஸ்திரமான ஸ்திதியில் வைக்கவேணும். தாயையும் தகப்பனையும்
நாங்கள் சேர்ந்து நமஸ்கரித்து வாழவேணும்' என்பது முனிவர்கள் துதி.
பரஸ்பர ப்ரிய வீக்ஷணம் விவாஹத்துக்கு அங்கம். 'உத்வாஹ ஸம்ப்ரயோகபல'
தாக்குவ தென்னும் உத்வாஹமே உத்வாஹ மென்னும் விவாஹ மங்களம்.
விவாஹ க்ஷணத்தில் ம்ருதங்கம் பேரீ முதலியன முழங்கப்பட வேண்டும்.
இந்த ப்ரளய ஏகோதக ஸமயத்தில் ம்ருதங்காதிகளை அடித்து முழங்க ம்ருதங்
கங்களும் கிடையா; அடிப்பவரும் இல்லை. ம்ருதங்கத்துக்கு மரமேது? ம்ருத்
மரம் எல்லாம் பூமிக்குள் கிடக்கிறது. அவள் உடலின் பேரில் அடித்து ம்ரு
தங்க த்வநி உண்டாக்கவேணும். அது உசிதமல்ல. ம்ருத் என்பது மண்; பூமி
தேவியின் அங்கம். அவள் உடலையே அவள் விவாஹத்தில் ம்ருதங்கமாக்குவது
உசிதமல்ல. தவில் வாத்யத்தை அடித்து முழக்க வேண்டியதோ அவச்யம்.
அலைகளை இவர் மிகப் பெருந் திருமேனியோடு கால்களால் வேகமாய்த் தள்ளிக்
கொண்டு தேடிப்போகிருர். 'புரைர் புரப்ரைர் சிதாஸ்ரைர்-கத்திபோலும்
அம்புபோலும் கூர்மையான குளம்புகளால் ஸமுத்ரத்தைக் கிழித்துக்கொண்டு
பூமி தேவியைத்தேடிச் சென்று அவளைக் கண்டுபிடித்தார். பூமியிலும்
வேருன ஸமுத்ர ஜலங்களே ம்ருதங்கம்போல் ஆயின. இவர் திருவடிக் குளம்பு
களே அடிக்கும் கோலும் கையுமாயிற்று. ஜலதரங்க வாத்ய கோக்ஷம்.
'உசிதா: ம்ருதங்கா:' பூமி தேவியின் விவாஹத்துக்கு அலைக்கும் ஸமுத்ரம்
தான் உசிதமான ம்ருதங்கம். 'உசித' ஶப்தத்தாலும் 'ம்ருதங்க' ஶப்தத்
தாலும் இந்த ரஸங்கள் காட்டப்படுகின்றன. [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ருஷ்ஷீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸூக்தி ஸௌஹார்த்த விவேசநம்.

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் வித்வான் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி,
ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு.]

அடியேனுடைய ஸதாசார்ய ஸூக்தி ஸௌஹார்த்த வ்யாஸமும், அதைப் பற்றிய ஸம்பாதக ஸ்வாமி குறிப்பும், சென்ற ஸஞ்சிகையில் ப்ரசுரமாகி யிருக்கின்றன. முண்டகோபநிஷத் பாஷ்யத்தில் பிந்ந வஸ்துக்களுக்கும் உபாதாநோபாதேய பாவ முண்டு என்பதாக அருளியிருப்பதைப்பற்றி ச்ருதப்ரகாசிகாசார்யர் அப்பைய தீக்ஷிதர் முதலிய பூர்வர்கள் ஸம்ப்ரதிபத்தியையும் உபபத்தியையும் விரிவாக வ்யாஸத்தில் நிரூபித்திருக்கிறேன். அது ப்ரக்ருதத்துக்கு ஸங்கதமே என்பதாக ஆமோதநம் செய்து, மேலே ஸ்வாமி குறிப்பிடுவதாவது :—"ஆனால் அதை ஸாதிப்பதற்கு ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் கல்பித்திருக்கும் புதிய லக்ஷணம் அபேக்ஷித மில்லை. ப்ரஹ்மத்திற்கு ஸர்வ கார்ய கர்த்ருத்வத்தைச் சொல்லும் ச்ருதிகள் அதை ஸ்வதஸ்ஸித்தமாக ஸ்தாபிக்கின்றன. அவை பிந்ந த்ரவ்யங்களே. அவைகளுக்கு உபாதாநோபாதேய பாவத்தை ச்ருதிகளே 'ஸூதா நம்ஹ்வயஉக-ப-த' இத்யாதி வாக்யங்களாலே ஸ்தாபிக்கின்றன. அதைப்பற்றி விவாத மொன்று மில்லை. ச்ருதி சொல்லிவிட்டது என்பதே பர்யாப்தமாயிருக்க ஒரு லக்ஷணாந்தரத்தை கல்பிக்க ப்ரயத்நப் படுவானேன் என்பதே ஆக்ஷேபம்" என்பதாக.

இந்த ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. உபாதாநோபாதேய பாவமானது பிந்நங்களுக்கு முண்டு என்பதில் ச்ருதி ஸம்மதியானது நிர்விவாத மென்று தேறிய பிறகு, லக்ஷ்யாநுகமத்திற்காக லக்ஷண கல்பநம் செய்வதில் யாதொரு தோஷமு மில்லையே.

ப்ரக்ருத விஷயத்தில் ப்ரமாண ப்ரதர்சநம் பண்ணு மிடத்தில் 'ஸூஜஸூஹ்ஸ்ஹ்யீ ஜமதோ ப்ரஹ்மகாயஉதயா' இத்யாதி ஸ்ரீபாஷ்ய ஸூக்தியையும் தத்வ்யாக்யாந ச்ருதப்ரகாசிகையையும் வ்யாஸத்தில் உதாஹரித்திருக்கிறேன். அதாவது :—

'ஜமத ஊதி நிஷ்ஷஉகஸ்ரூப: ப்ரஹ்மஸ்ரூபோவி விஶேஷ்யூஉா தவா:

என்பதாக ச்ருதப்ரகாசிகை யுள்ளது. இங்கு த்ரவ்யைக்ய மின்றிக்கே நிஷ்க்ருஷ்டங்களான விசேஷ்யாம்சம் விசேஷணாம்சங்களுக்கே உபாதாநோபாதேய பாவம் அருளியிருப்பதை நாம் மறக்கலாகாது. பிந்நங்களுக்கு உபாதாநோபாதேய பாவமானது உபநிஷத் பாஷ்யகாரோபஜ்ஞ மென்றும் பூர்வாசார்ய மத விருத்த மென்றும் ஸ்வாமி எழுதலாகுமோ? சாரீரக த்விதீயாத்யாயத்திலே விலக்ஷணத்வாதிகரணத்திலே பிந்நங்களுக்கு உபாதாநோபாதேய பாவத்தை ஸித்தாந்தம் செய்திருப்பதையும் எற்கெனவே ப்ரஸ்தாவித் திருக்கிறேன். காரணம் சேதநமாய், கார்யம் அசேதநமுமாய் விலக்ஷணமே யாகிலும், உபாதாநோபாதேய பாவம் கூடும் என்பதாக அங்கு ஸித்தாந்தம்.

ஆத்மத்வோபாஸநாதிகரணத்திலே, சிதசிதாத்மகமான ப்ரபஞ்சமானது ப்ரஹ்மத்திற்கு ஶரீரமும் உபாதேயமு மாகிறது என்பதாக ஸ்ரீ பாஷ்யகாரர் அருளுகின்றார். விஶிஷ்டம் சரீர மன்றே. நிஷ்க்ருஷ்டமான விசேஷணம்ஶ மாத்ரமேயன்றோ சரீரம். உபாதேயமும் அதுவே என்பதனால் கார்ய காரணங் களுக்கு பேதம் ஸித்தமன்றோ? க்ருத்ஸ்ந ப்ரஸக்த்யதிகரண ஸித்தாந்தமும் ப்ரஹ்மத்திற்கு ஜகதாகாரரேண பரிணாமத்தை ஸ்தாபிக்கின்றது. இவ்வாறாக பிந்நங்களும் உபாதாநோபாதேய பாவமானது ஶாரீரகாதிகரணங்கள் பலவற்றி லும், ஸ்ரீ பாஷ்யம் ச்ருதப்ரகாசிகை இவைகளிலும் ஸுஸ்பஷ்டமாயிருப்பதால், இந்நிஷ்கர்ஷமானது உபநிஷத் பாஷ்யகாரர் காட்டிய புதிய வழியன்று. ஸ்ரீ பாஷ்யாதி விருத்தமு மன்று.

ஆனால் 'ஸ்ரீ பாஷ்யகாரர் தாமே விஶிஷ்டமே உபாதாநமும் உபாதேயமும் என்று ஸாதிப்பதும், விசேஷ்யாம்சத்திற்கும் விசேஷணம்சத்திற்கும் உபாதா நோபாதேய பாவ முண்டென்றும் ஸமர்த்தநம் செய்வதும் எப்படி உபபந்நம்?' என்று ஓர் ஆஶங்கை எழலாம். இதற்குப் பரிஹாரம் யதாமதி விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன் :–நமது ஸித்தாந்தத்தில் விசிஷ்டம் என்பது விஶேஷண விஶே ஷ்ய ஸமுதாய ரூபமே யன்றி நையாயிக ரீதியில் போல அதிரிக்தமல்ல. ஆகவே சிதசித் விஶிஷ்டத்திற்கு உபாதாநோபாதேய பாவம் சொல்லுவதானது, சேதநம் அசேதநம் ப்ரஹ்மம் ஆகிய ஸமுதாயத்திற்கு, மற்றொரு அந்த ஸமுதாயம் காரண மென்பதே யாகும். சித்ர படமானது சுக்ல க்ருஷ்ண ரக்த தந்து ஸங்காதத்தை உபாதாநமாகக் கொண்டிருப்பதுபோல், சிதசிதீச்வர ஸங்காதத்தை உபாதாநமாகக் கொண்டது இந்த ப்ரபஞ்சம். மூன்று அம்ஶங் களும் கார்யமாகின்றன. அப்படியே அம்மூன்று அம்ஶங்களும் காரணமு மாகின்றன என்பதாக ஸித்தாந்தஸரணி. இப்படி மூன்று அம்சங்களுக்கும் மூன்று அம்ஶங்கள் காரணமாகில் எந்த அம்ஶத்திற்கு எந்த அம்ஶம் காரணம் என்பதாக மேலே மற்றொரு ஶங்கை எற்படுகிறது. அசித்அம்ஶத்திற்கு ஸூக்ஷ் மாசித்தும், சித்அம்சத்திற்கு ஸூக்ஷ்ம சித்தும், ப்ரஹ்மாம்ஶத்திற்கு ப்ரஹ்மாம் ஶமும் முறையே காரணமாகின்றன என்பதாக ஆசார்யர்கள் நிர்வஹித்தார்கள் ஆத்மாதிகரண ஸ்ரீ பாஷ்யம் இங்கு அநுஸந்தேயம். அதாவது:—

காரணாவஸ்தஸ்ய கார்யாவஸ்தாவத்தாவ ஜீவம்ஶஸ்ய......ஸ்வரூபாந்யதா பாவரூபவிகாரோ பவதி ॥ ஜீவம்ஶஸ்ய च......ஜ்ஞாநவிகாஸரூபவிகாரோ பவதி.........நியந்த்ரம்ஶே தத்வஸ்த தத்ரூபவிஶிஷ்டாரூபவிகாரோ பவதி.
காரணாவஸ்தாயா அவஸ்தாந்தராபத்திரேவ விகார: ப்ரகாரத்வயே ப்ரகாரிணி ச ஸமாநம்.

"பாவத்வஸ்தாவத: ப்ராபவஸ்தாயோகித்வம்" என்பதாக உபாதாந லக்ஷ ணம் ஸ்வரூபாந்யதாபாவரூபமான விகாரமானது விஶேஷணாம்ஶமான அசித் திற்கு இருப்பதால், அசித்அம்ஶத்திற்கு ஸூக்ஷ்மாசித்அம்ஶம் உபாதாநமாகிறது தர்மபூத ஜ்ஞாநத்தின் ஸங்கோச விகாஸ ரூபமான நிலைக்குச் சேதந ஸ்வரூப

மானது ஜ்ஞாந த்வாரகமாக ஆச்ரயமாகையால் சித்து என்கிற விஶேஷணாம்
ஶத்திற்கு ஸூக்ஷ்ம சிதம்ஶமானது உபாதாந மாகிறது. ஸூக்ஷ்ம ஸ்தூல சிதசிந் நியந்த்ருத்வமாகிற அவஸ்தா விஶேஷத்தினால் ப்ரஹ்ம ஸ்வரூபம் தனக்குக்
கார்யமும் காரணமு மாகிறது. விஶேஷணாம்ஶங்களைச் சேர்ந்த ஸ்வரூபாந்யதா
பாவமும், ஸ்வபாவாந்யதா பாவமுமாகிற நிலை (அவஸ்தை) களுக்கு ஸூக்ஷ்ம விஶே
ஷணாம்ஶங்கள் ஆச்ரயமாவதால் அவை அவற்றுக்கு உபாதாந மாகின்றன.
விஶேஷ்யாம்ஶமாகிய ப்ரஹ்ம ஸ்வரூபமும் விஶேஷணாம்ஶங்களைச் சேர்ந்த
விகாரங்களுக்கு ஆச்ரய மாவதால் விஶேஷணாம்ஶத்திற்கு உபாதாநமாகிறது.
அசிதம்ஶத்தில் ஸாக்ஷாத்தாகவே அவஸ்தாந்தராபத்தி யுள்ளது. சிதம்ஶத்
திலோ தர்மபூத ஜ்ஞாந த்வாரா அது உள்ளது. ப்ரஹ்ம ஸ்வரூபத்திலோ
வெனில், அசித்வாரகமாகவும் சிதம்ஶத்வாரக மாகவும் அந்த விகாரங்கள் உள்
ளன என்பதே வித்யாஸம். ஸாவ்யவஸ்தாச்ரயத்வ மென்கிற ஆகாரம் துல்யம்.
ப்ரக்ருத்யதிகரண ச்ருதப்ரகாஶிகையிலும் இவ்வர்த்தம் காண்க. ஆகவே:
விஶேஷணாம்ஶத்தைப்பற்றி விஶேஷணாம்ஶமானது உபாதாநமாவது போல
விஶேஷ்யாம்ஶமும் உபாதாநமே என்று தேறுகிறது. உபாதாந லக்ஷண.
மாகிய அவஸ்தாச்ரயத்வமானது விஶேஷணத்திற்குப்போலவே விஶேஷ்யாம்
ஶத்திற்கும் சேருகிறது. ப்ரஹ்மாம்ஶமானது விஶேஷணாம்ஶத்திற்கு உபா
தாநகாரண மன்று என்று கொண்டால் 'ஸாவ்யவஸ்தாவத: ஸாவஸ்தாஶ்ரயத்வ'
என்று ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாஶிகாதி நிர்ணீதமான உபாதாந லக்ஷணத்திற்கு
விஶேஷ்ய ஸ்வரூபத்தில் அதிவ்யாப்தி என்கிற தோஷமும் ஏற்படுகிறது.
ஆகவே விஶேஷ்யாம்ஶத்தையும் லக்ஷ்யமாகக் கொள்ளவேண்டியது ஆவச்யக
மாகிறது.

ப்ரஹ்மாம்ஶத்திற்கு அஸாதாரணமான சிதசிந் நியந்தருத்வாவஸ்தைக்கு
விஶேஷணாம்ஶங்களாகிய சிதசித்துக்கள் ஆச்ரயங்க ளன்று. ஆகவே அவை
விஶேஷ்யாம்ஶத்திற்கு உபாதாநங்க ளாகமாட்டா. 'யாவதவஸ்த்தாச்ரயத்
வம் அல்லது காரணத்வம் உபாதாந லக்ஷண லக்ஷணத்தில் சேர்ந்தது.
ஆகவே அதிப்ரஸங்க மில்லை. இதனால் அபிந்நங்களுக்கே உபாதாநோபாதேய
பாவம் என்கிற நியதி யில்லை' என்று உபநிஷத் பாஷ்யத்தில் அருளியது ஸுப்ர
திஷ்டாபித மாயிற்று. தேசிகன் சததூஷணியில் 55-வது வாதத்தில் ப்ரக்ருத
விஷயமாக

"உபாதாநேऽபி ஹி கார்யகாரணயோரத்யந்தாபேதோ நைவ த்ருஶ்யதே",

என்று ஸித்தாந்தித்திருப்பது மிகவும் உபயுக்தமானது. ந்யாயஸித்தாஞ்ஜநத்
திலே ஈச்வரனுடைய நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபத்திற்கு ஸர்வாதாரத்வம் ஸர்வ ஶரீ
ரகத்வம் முதலியவற்றோடொக்க 'ஸர்வ கார்யோத்பாதகத்வம்' என்று லக்ஷ
ணம் அருளியதும் விஶேஷணாம்ஶமாகிய ஸர்வ கார்யத்திற்கும் ஈச்வரஸ்வரூபம்
உபாதாந மென்பதை த்ருடீகரிக்கின்றது.

மஹாசார்யரும் சண்டமாருதத்திலே (சததூஷணீ 53-வது வாதம்)
'ததைக்ஷத பஹு ஸ்யாம்' என்கிற ச்ருதியை ப்ரஸ்தாவித்து, ப்ரஹ்மத்திற்கும்

விசேஷணும்சத்திற்கும் உபாதாநோபாதேய பாவத்தை ஸ்தல த்வயத்தில் ஸாதித்திருக்கிறார். ஆகவே: ஸ்ரீ பாஷ்யகாரர் ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்ரீ தேசிகன் மஹாசார்யர் தீக்ஷிதர் ஆகிய முன்னோர்கள் ஏக கண்டராய்க் கொண்ட அர்த்த விசேஷத்தையே உபநிஷத் பாஷ்யகாரரும்

" ந ஹ்யவிஷயொபெவொவாதாநொவாஷெயஹாவ உதி நியமஃ

என்பதாக அருளியிருக்கிறார். அநந்தாசார்யர் ஸித்தாந்த ஸித்தாஞ்ஜநத்திலும், திருப்புட்குழி ஸ்வாமி ரத்நபேடிகையிலுமாக, இப்படிப் பின்புள்ளாரும் இப் பக்ஷத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நமஃ

அபிந்ந நிமித்தோபாதாந பாவ விசாரம்

[ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸையங்கார், பனஸ்வாடி பங்களா, கோரேகான், பம்பாய்.]

சாரீரன் என்று பகவானைச் சொல்வது நம் ஸித்தாந்த ரீதியாகத்தான் அந்வர்த்த நாமாவாகும். 'ஜகத் ஸர்வம் ஶரீரம் தே' என்கிற வ்யுத்பத்தியால் ப்ராப்தமான இந்தப் பெயரை, மற்ற ஸித்தாந்திகள் சொல்வது ரூடியானதே யாகும். அப்படிப்பட்ட பகவானை விசாரிக்கும் சாரீரக சாஸ்த்ரத்தில் முதல் நான்கு ஸூத்ரங்களும் சாஸ்த்ராவதாரம். அதில் ஸகல கல்யாணகுண விசிஷ்டன் ஜிஜ்ஞாஸ்யனென்று முதல் நான்கு ஸூத்ரங்களில் ஸித்தாந்தம் செய்யப் பட்டது. பிற்பட்டு 'ஈக்ஷதேர்நாஶப்தம்' என்கிற ஸூத்ரத்தில் 'ஸாங்க்யர் சொல்லும் ப்ரதாநம் ஜகத் காரணமில்லை; பரமாத்மாதான்' என்று ஸித்தாந்தம் செய்தார்கள்.

பிற்பட்டு 'ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்' என்கிற ஸூத்ரத்தில், ப்ரஹ்மம் ஜகத்துக்கு நிமித்த காரணமாகவேண்டுமானால் இருக்கட்டும். ப்ரக்ருதிதான் உபாதாந காரணமாக இருக்குமோ என்கிற பக்ஷத்துக்கு ஸமாதாநமாக, நிமித்தம் உபாதாநம் இரண்டும் ப்ரஹ்மமே யென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. சேதநாசேதநங்களோடு கூடிய ஜகத் பரமாத்மாவுக்கு சரீர மானதால், பரமாத்மா சரீரியானதால், இங்கு த்ரவ்யைக்யம் ஏற்படுகிறது. ஆனதால் ப்ரஹ்மமே நிமித்தமாயும் உபாதாநமாயும், ஜகத் உபாதேய மாகவும் ஆகிறது. ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு இப்படி ஸித்தாந்தம் செய்தால்தான்,

" யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்
யதாஸோம்யைகேந நகநிக்ருந்தநேந ஸர்வம் கார்ஷ்ணாயஸம் விஜ்ஞாதம் ஸ்யாத்"

என்கிற ச்ருதி வாக்யங்களுக்கு சிதசித் விசிஷ்ட பரமாத்மாவை யறிந்தால், சித்தையும் அசித்தையும் கூட அறிந்தவனாகிறான் என்று ஸித்தாந்தம் செய்ய

முடியும். ஆனதுபற்றி, பரிணமிப்பது ப்ரக்ருதியானாலும், பரமாத்மாவுக்கும் ப்ரக்ருதிக்கும் ஶரீர ஶரீரி பாவம் ஏற்பட்டதால், விஶிஷ்ட ப்ரஹ்மத்தை அறிந்தவன் ஸர்வத்தையும் அறிந்தவனாகிறான் என்று ஏற்படுவதால், ஏகவிஜ்ஞாநேந ஸர்வ-விஜ்ஞாநாவாப்தி ஏற்படுகிறது. பிறகு ஆரம்பணாதிகரணத்திலும் அவதாரிகையில் ஸ்ரீ பாஷ்யகாரர் 'ததநந்யத்வமாரம்பணஶப்தாதிப்ய:' என்று ஸாதித்தபடி ஸ்தூணாநிகநந ந்யாயத்தாலே இதை த்ருடப்படுத்தினார்.

ப்ரக்ருதம் எடுத்துக்கொண்ட விஷயம் உபாதாநோபாதேய பாவ விசாரமானாலும், முதலில் நிமித்தமும் உபாதாநமும் ப்ரஹ்மமே என்பதை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியது அவச்யமானதால் இதைப்பற்றி விவரித்தோம். மண் கடமாவது யாவரும் அறிந்ததே. மண்ணும் குயவனும் ஒன்றே என்பதுதான் ஸித்தாந்தமானதால், அது முன்னடியாக விவரிக்கப்பட்டது. லோகரீதியாக 'அபிந்நமான வஸ்துவுக்குத்தான் உபாதாநோபாதேய பாவமுண்டு' என்பது விஶேஷமாக ப்ரஸித்தமாய்த் தெரிந்த விஷயம். ஆனால் இதுதான் நியமமென்பதில்லை. அபிந்ந வஸ்துக்களுக்கும் உபாதாநோபாதேய பாவம் ஏற்படுமென்று நம் பூர்வாசார்யர்கள் ஸித்தாந்தித்திருக்கிறார்கள். இது, நம் பாஷ்யகாரர் ஸ்ரீ தேஶிகன் முதலானோர்களுடைய வாக்யங்களுக்கு விருத்தமன்றோ என்று கேட்கலாம். அதில் அந்த வாக்யம், முந்திய வாக்யங்களோடும் பிந்திய வாக்யங்களோடும் சேர்த்து வாசிக்கவேண்டிய விஷயம். ஆனதால், ஷஷ்ட ப்ரகரணத்தில் 'யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந' இத்யாதி வாக்யம் காணப்படுகின்றது.

இதன் தாத்பர்யம்:— 'எந்த ஒரு வஸ்து தெரிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகிறது' என்கிற தேவரீர் வாக்யத்தைக் கேட்டேன். அந்த வஸ்து எது என்பது தான் கேள்வியின் அர்த்தம். எல்லாவற்றுக்கும் நிமித்தமும் உபாதாநமுமானது எது? இந்த இடத்தில் 'ஸர்வம்' என்கிற ஶப்தத்தால் ஸ்தூல சிதசித்தை ஶரீரமாக உடைய பரமாத்மாவை ஶௌநகர் கேட்டதா? அல்லது விஶேஷணமான சித்தையும் அசித்தையும் மாத்ரம் நினைத்துக் கேட்டதா? சிதசித் விஶிஷ்ட பரமாத்மாவை நினைத்துக் கேட்டதன்று. ஏனெனில்: அவருக்கு அந்த ஸமயம் ப்ரஹ்ம ஸ்வரூபம் என்னவென்று தெரியாததாலும், புத்தி ஶப்தாதிகள் ப்ரஹ்ம பர்யந்தம் அந்வயிக்குமென்று தெரியாததாலும், 'தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்' என்று பின் வாக்யத்தில் 'இதம் ஸர்வம்' என்பது ஜகத்தை மாத்ரம் குறிப்பிட்டு ப்ரஹ்ம பர்யந்தம் சொல்லாததால், கேள்வியிலிருக்கும் 'இதம் ஸர்வம்' என்பதும் அந்வயிக்காததால் முதல் பக்ஷமில்லை. 'இதம் ஸர்வம்' என்பது விஶேஷணமான ஜகத்தை மாத்ரம் குறிப்பிட்டதாகுமோ வென்கிற இரண்டாவது பக்ஷமோ வென்றால் இல்லை. விஶேஷணமாகச் சொல்லும் அக்ஷரப்ரஹ்மத்தை விட்டு வேறான ஸ்தூல சிதசித்துக்கு ப்ரஹ்மமோ பாதகத்வம் இல்லாததால் என்று சொல்லலாமோ வென்றால், கேளீர்:—'இதம் ஸர்வம்' என்று சொல்வதால் விஶேஷணம்தான் சொல்லப்படுகிறது; விஶேஷ்யமான பரமாத்மா வல்ல. இருந்தாலும் விஶேஷணமான ஜகத்துக்கு ப்ரஹ்மத்தினிடமிருந்து உபாதேயத்வம் உண்டு. பிந்நமில்லாத வஸ்துவுக்குத் தான் உபாதாநோபாதேய பாவமுண்டு என்பது உண்டா என்ன?

இல்லை. பிந்நமானவைகளிலும் உபாதாநோபாதேய பாவ முண்டு. உபாதா நோபாதேய பாவ மென்பதை விவரிக்கிறார். தத்ஸமயம் ஸ்தூலாவஸ்தையோடு கூடியது, முந்தி ஸூக்ஷ்மாவஸ்தையோடு கூடியிருத்தல் அல்லவா உபாதாநம் என்பது. இம்மாதிரி அவஸ்தையோடு கூடியிருப்பதென்பது, சித் அசித் பரமாத்மா மூன்றுக்கும் பொது. ஆனால் மூன்றுக்கும் இதுதான் அவஸ்தையில் விசேஷம்:—அசேதநத்துக்கு அத்வாரகமாக நேரிட்ட அவஸ்தை ஏற்பட்டு விடுகிறது. சேதநத்துக்குத் தர்ம பூத ஜ்ஞாநத்தாலும், சேதந ஶரீர த்வாரா வாகவும் கர்மாவின் அநுகுணமாக ஸங்கோச விகாஸ அவஸ்தாச்ரயமாக இருக்கிறதாலும், பரமாத்மாவுக்கு அவஸ்தாத்வம் சேதநாசேதந மூலம் அவஸ் தாச்ரயத்வம். ஆனதால் அவஸ்தா யோகித்வம் பரமாத்மாவுக்கும் சேதநா சேதந ப்ரபஞ்சத்துக்கும் பொதுவானதால், பரமாத்மா சேதந ப்ரபஞ்சத்துக்கு அவஸ்தாச்ரய மானதால், ஜகத்துக்குப் பரமாத்மாவையிட்டு உபாதேயத்வம் இருக்கத்தான் செய்யும்.

மேலும்: 'ஐக்ஷம் ஸவுகூ' என்று விசேஷணத்தைச் சொன்னாலும், மேலே சொன்ன காரணத்தால் அக்ஷர ப்ரஹ்மம் இந்த விசேஷணமான ப்ரபஞ் சத்துக்கு உபாதாநம் தான். ஆனதால், 'ஸூக்ஷ்நி நீ வசு ஸூமவொ விஜ்ஞாதெ' என்று விசேஷண மாத்ரத்தில் உபாதாந ப்ரசங்கம் யுக்தம்தான். ஆனதால்தான் மஹாஸித்தாந்தத்தில் வ்யாகரணத்தில், ஸகல ஜகத்தும் பரமாத்மாவின் கார்ய மானதால், பரமாத்மா அதற்கு அந்தர்யாமியானதால், ததாத்மக மானதால் ஐக்ய மானதாலும், அதில்லாமல் நாநாத்வம் மறுக்கப்படுகிற தென்று விஶிஷ் டத்துக்குத்தான் உபாதாநோபாதேய பாவம் என்றும், விசேஷணத்துக்கு மாத்ர மில்லை யென்றும் சொல்லப்பட்டது. ஆனதால் விசேஷணமான சேத நாசேதநங்களோடு கூடிய ப்ரபஞ்சத்துக்கு ப்ரஹ்மோபாதேயத்வம் யுக்தமே.

ஆகவே: பரமாத்மாவுக்கு அவஸ்தாச்ரயத்வம் இருப்பதாலும், சித்துக் கும் அசித்துக்கும் தம் தம் வழியில் அவஸ்தாத்வம் இருப்பதால், இந்தப் பொதுவான அவஸ்தாவத்வத்தை யிட்டுச் சிதசித்துக்கும் பரமாத்மாவுக்கும் விசேஷண விசேஷ்ய பாவம் ஏற்படுவதால், ப்ரபஞ்சம் பரமாத்மாவை விட்டு விலக்ஷணமானாலும் மேலே சொன்ன ந்யாயத்தால் உபாதாநோபாதேய பாவம் ஏற்படுகிறது. ஆனது பற்றி உபநிஷத் பாஷ்யகாரர்,

"நஹ்யவிஹயொஸெவொவாஉாெநாவாஷெய ஹாவ ஊதி நியஃ"

என்றார். ஸாதாரணமாக உபாதாநமும் உபாதேயமும் ஒரே த்ரவ்யமாக இருக் கும். மண் உபாதாநம்; கடம் உபாதேயம். இங்கு அது மாத்ர மல்ல. பிந்ந விஷயத்திலும்உபாதாநோபாதேயம் ஏற்படு மென்று ருஜூப்பித்துக் காட்டின படி ஆனதால் உபநிஷத் பாஷ்யகாரர் வாக்யத்துக்கு "அபிந்நமான வஸ்து வுக்கும் தான் உபாதாநோபாதேய பாவமுண் டென்பதில்லை; பிந்நமானதிலும் உண்டு" என்பதுதான். ஆனதால், மேலே சொன்ன காரணத்துக்காக உப நிஷத் பாஷ்யகாரர் வாக்யம் நம் பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்துக்கு உகந்ததே.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநம்

கல்யாணபுரம் அக்ரஹாரத்தில் சுமார் எட்டு மாஸ காலமாய், வித்வான் காடந்தேத்தி ஸ்ரீ. உப. கோபாலாசார்ய ஸ்வாமியால் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநம் பூர்த்தி யடைந்து, 1–12–47-ல் பட்டாபிஷேக மஹோத்ஸவம் விசேஷ விமர்சையோடு நடைபெற்றது. இந்த ஸ்வாமி, இன்னிசையோடும் விசேஷார்த்தங்களோடும் பண்டித பாமர ரஞ்ஜகமாக இதிஹாஸ புராண ப்ரவசநத்தை ப்ரதாந கைங்கர்யமாகக் கொண்டு பல விடங்களில் நடத்திக்கொண்டுவருகிறார். அக்ரஹார வாஸிகள் பரம குதூஹலிகளாய் ச்ரவணாநந்தம் அநுபவித்து, ஷை ஸ்வாமியினிடம் விசேஷ ப்ரதிபத்தியோடு 'யொமகெஷஂ வஹாஜூஹ' என்ற ஶ்ரீரங்கனுடைய ஸங்கல்பத்தைப் பூர்த்தி செய்வித்து வருகிறார்கள். ப்ரக்ருதம் ஸ்ரீமத் பாகவதம் ஆரம்பித்து நடந்து வருகிறது. க்ராமந்தோறும் இம்மாதிரி புராண ப்ரவசநம் நிகழ்ந்து ஆஸ்திக்யம் ஓங்குமாறு ஶ்ரீரங்கன் அநுக்ரஹிக்கவேணும்.

மதுராந்தகம். தி. ஈ. வீரராகவாசார்யர்.

* * * *

ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தவர்த்திநீ பாடசாலை, சென்னை

சென்னை ஆதிகேசவலு செட்டியார் சாரிடியைச் சார்ந்த ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்த வர்த்திநீ பாடசாலையின் 40-வது வார்ஷிக மஹோத்ஸவம், சென்னை ஹைகோர்ட் மாஜி நீதிபதி ஸ்ரீ. உ. வே. V. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியின் தலைமையில் நன்கு நடைபெற்றது.

ஷை பாடசாலையின் தலைவர் ஸ்ரீ. T. S. ஸ்ரீநிவாஸய்யங்காரால் ஸ்வாகத பூர்வமாக வரவேற்கப்பட்டு, அக்ராஸநாதிபதி ஆஸநத்தில் அமர்ந்தார். ஷை சாரிடி மெம்பரான ஸ்ரீமான் வரதப்ப செட்டியார் அவர்கள் (1946—47) வர்ஷத்திய ரிபோர்ட்டைப் படித்தார். சாரிடியின் மற்றொரு மெம்பராகிய ஸ்ரீமான் V. C. சேஷாசலம் செட்டியார், ஸம்ஸ்க்ருத பாஷாபிமாநிகள் ஷை பாஷையைப் படிக்கத் தங்கள் பையன்களை அதிகம் அனுப்ப வேண்டும் என்றும், தற்பொழுது தாங்கள் முயற்சி செய்தும் பையன்கள் கிடைக்கவில்லை யென்றும், பையன்கள் முன் வந்தால் தங்களால் கூடுமான வரையில் ஷை பாடசாலையின் நிலையை உயர்த்தத் தயாராயிருப்பதாயும் கூறினார்.

ப்ரஸிடெண்ட் அவர்களால் சென்ற வர்ஷத்திய கவர்ன்மெண்டு பரீக்ஷை, வகுப்புப் பரீக்ஷை, உபந்யாஸப் பரீக்ஷை முதலியவைகளில் முதன்மையில், தேறிய மாணவர்களுக்கு மெடல்கள் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. ஸ்ரீமான் திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் அவர்கள், ஸம்ஸ்க்ருத பாஷையே நம் இந்தியாவின் புராதந பாஷையாயிருந்த தென்றும், மற்ற மாகாண பாஷைகளைக் கொண்டே இதன் உண்மையை உணரலா மென்றும், இந்தியாவின் ஐக்யம் ஸம்ஸ்க்ருத பாஷையையும் வேதத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தது என்றும், தற்பொழுதும் அந்தந்த மாகாண பாஷையாகிய தாய் மொழியையும் தேச பாஷையாக இந்த ஸம்ஸ்க்ருத பாஷையையும் யாவரும் கற்க முன்வரவேண்டும் என்றும், ஸ்த்ரீகளும் இதில் முக்யமாகப் பங்கு பெறவேண்டு மென்றும், இதனால் அகில இந்திய ஐக்யம் ஏற்படு மென்றும், நமது புரா

தநக் கலாசாரப் பொக்கிஷங்களான அநேக க்ரந்தங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே அநாதியாக விருக்கின்றன வென்றும், அவற்றை யாவரும் கற்க முன் வரவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

அக்ராஸந ரவர்கள் ஸம்ஸ்க்ருதத்தின் பெருமையையும் இந்தப் பாடசாலையின் திற மையையும் பற்றி ச்லாகித்துக் கூறி, இந்தத் தர்ம ஸ்தாபந கர்த்தாவாகிய ஸ்ரீமான் ஆதி கேசவலு செட்டியார் அவர்களின் உத்தம குணங்களையும், தாமும் இந்த ஸ்தாபநத்தை ஏற்படுத்த அவருக்கு உதவி செய்ததையும், அப்பெரியாரின் புகழ் என்றென்றும் நிலைத் தோங்கு மென்றும் கூறி, ஷை பாடசாலை வித்யார்த்திகளுக்கு ஆசியும் கூறினர். பிறகு ஷை பாடசாலை மாணவர்களால் ஸம்ஸ்க்ருத பாஷையில் 'மிருச்சகடிகம்' என்னும் நாட கம், நவீந மெட்டுகளுடன் கூடிய ஸம்ஸ்க்ருத பாடல்களுடன் நன்ருய் நடிக்கப்பட்டது சுமார் 20 வித்யார்த்திகள் இதில் கலந்து கொண்டனர்.

* * * *

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கர் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீமதஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில், 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தில்ல ஸ்தாநத்துக் கடுத்த பெரும்புலியூரில், ஸ்ரீ ஸுந்தரராஜன் திருவடி வாரத்திலுள்ள ஆச்ரமத் தில், ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனால் நடத்தப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமியின் ஆச்ரம ஸ்வீகாரம் முதல் 33-வர்ஷங்க ளாக இம்மஹோத்ஸவம் ஸ்ரீ ஸ்வாமியால் பல்லிடங்கள் தோறும் ப்ரதி வர்ஷமும் அவிச் சிந்நமாய்—விசேஷமாய்—நடத்தப்பட்டு வருகிறது. இவ்வர்ஷம் (ஸர்வஜித்) தைமீ 8உ காலை இம்மஹோத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு, 11உ வரை ப்ராதஸ் ஸாயம் வேத ப்ரபந்த க்ரந்த பாராயணங்களுடன் அதி விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இவ்வுத்ஸவத்தை ஸேவிப்பதற்கும், இதில் அந்வயிப்பதற்கும், சென்னை பெங்களூர் ஸ்ரீரங்கம் திருக் குடந்தை வெண்ணாற்றங்கரை கல்யாணபுரம் ராயம்பேட்டை முதலான இடங்களிலிருந்து வைதிக லௌகிக ஆஸ்திகர்கள் எழுந்தருளி ஸேவை ஸாதித்தனர். சாத்துமறை யன்று, தில்லஸ்தாநம் அஹோபில மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கர், இவர்களுடைய உத்ஸவ மூர்த்திகளைப் பெரும்புலியூர்க்கு எழுந்தருளப்பண்ணி, அங்குக் கோயில் கொண்டு எழுந் தருளியிருக்கும் ஸ்ரீ ஸுந்தர ராஜனையும், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸ்ரீ கோவிந்த ராஜன் ஆண் டாள் ஆழ்வாராசார்யர்களையும் மங்களாசாஸநம் செய்து, பெருமாளுடன் உபய வேத கோஷம் சூழ ப்ராகாரம் வலம் வந்து ஆச்ரமத்துக்கு எழுந்தருளப்பண்ணி யாயிற்று. அவ்விடத்தில் திருக்கண்டியூர் முதலான திவ்யதேசத்து எம்பெருமான்களின் ப்ரஸாதங் கள் அருளிப்பாடுகளுடன் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. அநந்தரம் சாத்துமறையும் கோஷ்டி தீர்த்தமும் பாதுகா தீர்த்தமும் ஆனபின்னர், சுமார் 400 திரு நாமங்களுக்குத் ததீயாராதநமும், கைங்கர்யங்களில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸம்பா வனைகளும் நடந்தேறின.

அருளுற்ற சிந்தையினால் அழியா விளக்கேற்றிய ஆசார்யோத்தமர்களுக்குக் கைம் மாறு செய்து அந்ருணர்களாவது முடியாத கார்ய மெனினும், சிஷ்யர்கள் தாம் பேறு பெறுதற்கு இத்தகைய மஹோத்ஸவங்களைச் செய்யவேண்டியது அவச்ய கர்த்தவ்ய மாகும்.

T. S. சேஷாத்ரி தாஸன்,
[தில்லஸ்தாநம்]

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபா, தேரழுந்தூர்

தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபில மடத்தில், நிகழும் ஸர்வஜித் ஞு மார்கழிமீ 13உ (28—12—48) யன்று, தார்மிக ரத்னப்ரதீப மதுரை ஸ்ரீ. உப. N. R க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ உப. S. ராகவாசார்யர் ஸ்ரீ. S. ஸுப்ரமண்ய ஐயர், ஸ்ரீ. உப. புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், ஸ்ரீ. உப. மதுரை N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலிய ப்ரமுகர்கள் விஜயம் செய்து, சிறுவர்களால் நடத்தப்பட்டு வரும் பாராயணத்தில் ஈடுபட்டு, அவர்களின் ஊக்கம் ச்ரத்தை முதலியவைகளை மிகவும் பாராட்டிப் பேசினார்கள்; அங்குள்ள புஸ்தகாலயத்தையும் பார்வையிட்டுத் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டார்கள். ஸ்ரீ. D ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஹிந்து மதம் பாழ்பட்டுச் சிதைந்து வரும் இந்நாளில், பரந்த நோக்கத்துடன் இந்த ஸபையை ஸ்தாபிதம் செய்தது அத்யாவச்ய மென்றும், இந்த ஸபையின் ஒரு பகுதியான நூல் நிலயத்தினால் சிறுவர் அடைந்த ஆஸ்திக்யம் அறிவு வளர்ச்சிகள் அளவிறந்தன வென்றும் பரக்கக் கூறி, இந்த ஸபைக்கும், ஸபா நூனிலயத்துக்கும் தம்மால் முடிந்த உபகாரங்களைச் செய்வதாகவும் சொல்லி முடித்தார்.

அடுத்தபடியாக ஷை ஸ்ரீ. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தலைமையில், 'அர்ச்சாவதாரத்தின் பெருமை' என்னும் விஷயத்தைக் கேட்போர் மனம் கரையும் வண்ணம் உபந்யஸித்தார். ஸ்ரீ. M. ஸோமஸுந்தரம் பிள்ளை அவர்களின் வந்தனோபசாரத்துடன் அக்கூட்டம் முடிவுற்றது.

மறுநாள் (29—12—47) காலை 7-மணிக்கு மீண்டும் ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தலைமையில் ஸபை கூடிற்று. அப்போது தலைவர் முன்னுரையாக, திருமங்கை மன்னன், திருவல்லிக்கேணிப் பாசுரத்தில் தெள்ளிய சிங்கப்பிரான் விஷயமாக அருளிச்செய்த 'பள்ளியிலோதி வந்த' என்னும் பாசுரத்தைக் கேட்போர் மகிழும்படி உபந்யாஸம் செய்தருளினார். அடுத்தபடி ஸ்ரீ. உப. புதுக்கோட்டை ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி, அப் பிரானுடைய பெருமைகளை அநேக திவ்ய ஸூக்திகளின் மூலம் விளக்கி, தமக்கு இந்த ஸதஸ்ஸில் அந்வயிக்கும் இம் மாபெரும் பாக்யம் கிட்டினது ஸ்ரீ. N. R. K. ஸ்வாமியாலும் சிறுவர்களின் பாராயண பாக்யத்தாலுமே யென்றும், இவ்விடத்தில் விளங்கும் ஒவ்வொரு சிறுவனும் ப்ரஹ்லாதாழ்வானைப்போல் பகவத் பக்தியும் செல்வமும் பெற்று வாழவேண்டு மென்றும் குழந்தைகளை ஆசீர்வதித்துத் தமது உபந்யாஸத்தை முடித்துக்கொண்டார். பிறகு ஸ்ரீ N. R. K. ஸ்வாமி, சிறுவர்களுக்கு ஊக்க முண்டாகும்படி தமது செஞ்சொற்களால் அவர்களை ஹ்ருதயங்கமமாக அநுக்ரஹித்தார்.

மறுபடியும் ஸ்ரீ. D. ராமஸ்வாமி ஐயங்கார் தலைமையில் ஸதஸ் உபக்ரமித்தது. அப்போது தலைவர் 'கம்பரும் வால்மீகியும்' என்னும் விஷயத்தை விரிவாகக் கூறி, கடைசியாக, கம்ப ராமாயணத்தை யாவரும், அதிலும் முக்யமாக இத்திவ்ய தேசவாஸிகள், அவச்யம் கற்கவேண்டு மென்றும் சொல்லி முடித்தார்.

அடுத்தபடி ஸ்ரீ. உப. A. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி '**கம்ப ராமாயணத்தின்** பெருமை' என்பது பற்றி நீண்டதோர் உபந்யாஸம் செய்தருளினார். பிறகு அவரது பின்னுரையில், ஸமீபத்தில் பாரதியாருக்கு எட்டயபுரத்தில் நடந்ததுபோல், இவ்வூர் கம்பநாட்டாழ்வாருக்கும் நடக்கவேண்டு மென்றும், அதற்குரிய தீவ்ர முயற்சிகள் நடப்பதிலிருந்து கம்ப நாடருக்குத் தனி மாளிகை சீக்ரம் ஏற்படக் கூடு மென்றும் சொல்லி, கம்ப ராமாயணத்தை ஒவ்வொரு தமிழனும் படிக்கவேண்டிய ஆவச்யகத்தையும் வற்புறுத்திப் பேசினார். கடைசியாக ஸ்ரீ. N. R. K. ஸ்வாமி கம்ப ராமாயணத்தில் சில பாசுரங்களைச் சொல்லி ச்ரோதாக்களுக்குச் செவியுண வூட்டினார். கழகத்தில் பங்கெடுத்துக்கொண்டு

மிகுந்த ச்ரத்தையுடன் சிறுவர்களுக்குக் கற்பித்துவரும் வித்வான் திரு. S. வைத்யநாத ஸ்வாமி ஐயர் அவர்களையும், திரு. T. A. பழநியப்ப முதலியார் அவர்களையும், ஷை கழகத்தின் அபிவ்ருத்தியின் பொருட்டுத் தொண்டாற்றிவரும் ஸ்ரீ வேங்கட ஸ்ரேஷய்யரவர்களையும் பற்றி வியந்து பேசினர். பின்னர் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கி உபந்யாஸம் செய்த வித்வான்களுக்கும் மற்றையோர்க்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு மங்களத்துடன் ஸதஸ் பகல் ஒரு மணிக்கு இனிது முடிவுற்றது.

* * *

நிகழும் ஸர்வஜித்துஸ்ரீ மார்கழிமீ 5உ (20—12—47) சனிக்கிழமை, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ரமும், (6-1-48) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ. அ. மடம் ஸந்நிதியில் 40-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக மஹோத்ஸவமும், தேரழுந்தூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ ஆமருவியப்பன் மாலை மர்யாதைகளுடன் ஸம்ப்ரமமாக நடைபெற்றன. அவ்வாறே ப்ரக்ருதம் ஸ்ரீ. அ. மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் நாளது தைமீ 26உ ஞாயிற்றுக்கிழமை யன்று மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படும்.

கடாம்பி. R. நரஸிம்ஹாசார்யர்
ஸ்ரீ. வி. ஸ. ஸபா கார்யதர்சி.

* * * *

கல்யாண மண்டபம், ஸந்நிதித் தெரு,

சிங்கப்பெருமாள் கோயில்

செங்கற்பட்டு ஜில்லா.

ஸ்ரீமான் க. வே. பாஷ்யம் ஐயங்கார் ஸ்வாமி, செங்கற்பட்டுக் கடுத்த சிங்கப்பெருமாள் கோயில் ஸந்நிதித் தெருவில், கல்யாணம் முதலிய சுப காரியங்களுக் கென்று ஒரு திருமாளிகை கட்டி, அதனை இலவசமாகக் கல்யாணக் காரர்களுக்கு விடுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

* * * *

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதநம்.

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வெள்ளி விழா மஹாராதந மஹோத்ஸவம் 3-2-48 முதல் 7-2-48 வரையில் ஐந்து தினங்கள் பண்ருட்டி

அக்ரஹாரத்தில் மிகவும் விசேஷமாய் நடந்தேறியது. முதல் நாள் காலை வேதபாராயண அத்யாபக க்ரந்த காலக்ஷேபங்கள் உபக்ரமிக்கப்பட்டு, ஐந்தாவது தினம் காலையில் வேத பாராயண அத்யாபக கோஷ்டிகளுடனும், மேள வாத்தியத்துடனும் விசேஷ புஷ்பாலங்காரங்களுடன் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப் படம் வீதி உத்ஸவம் கண்டருளி சாத்துமுறை ததீயாராதநங்கள் நடந்தன. முதல் நாள் ப்ரம்ம தேசம் வித்வான். ஸ்ரீ உப. ராமாநுஜாசாரியரால் ஆசார்ய பக்தி என்பது பற்றியும், இரண்டாவது நாள், கள்ளக் குறிச்சி ஸ்ரீ. உப. A. தாதாசாரியாரால் திருவடி என்பது பற்றியும், மூன்றாம் நாள் சித்தூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசாரியரால் விச்வாமித்ரர் ஸமாகமம் என்பது பற்றியும், நான்காவது நாள் ஷை யாரால் பாதுகா ப்ரபாவம் என்பது பற்றியும், குறிச்சி. ஸ்ரீ. உப. ராமபத்ராசாரியரால் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் என்பது பற்றி உபந்யாஸங்களும், அன்றிரவு திருவையாறு. ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீனிவாஸாசாரியரால் பக்த ப்ரஹ்லாதன் என்பது பற்றி ஹரிகதா காலக்ஷேபமும், ஐந்தாம் நாள், கோமல் வித்வான் ஸ்ரீ. உப. சேஷாத்ரி அய்யங்காரால் ருக்மணீ கல்யாணம் என்பதுபற்றி உபந்யாஸமும் நடந்தன. அன்றிரவு கைங்கர்ய பரர்களுக்கு ஸம்பாவனைகளும் மரியாதைகளும் வழங்கப்பட்டுக் கைங்கர்யம் இனிது முடிவடைந்தது. அநேக இடங்களிலிருந்து பல ஆஸ்திகர்கள் வந்திருந்தனர். நான்காவது தினம் த்வாதசி யன்று, ஸ்ரீ.உப. மங்கலம் ராமாநுஜையங்காரால் விசேஷ ததீயாராதநம் செய்விக்கப்பட்டது.

ஒரு சிஷ்யன்

* * * *

42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நிகழும் ஸர்வஜித் ஸ்ரீ தைமீ 26உ (8—2—48) ஞாயிற்றுக்கிழமை உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில், ஸ்ரீ அஹோபில மடம் திவ்யஸ்தாநத்தில் 42-வது பட்டத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் தில்லஸ்தாநம் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமி ஸமக்ஷமத்தில் வெகு விமர்சையாய் நடந்தேறிற்று. காலை திருவாராதநாநந்தம், தீர்த்தம் சடாரி ஸ்ரீ பாதுகா தீர்த்தம் முதலியவைகளுடன் த்ரிவித சித்ராந்ந விநியோகங்கள் நடந்தன. மத்யாந்ஹம் விசேஷ ததீயாராதநமும் தாம்பூல கோஷ்டியுமாகிய உத்ஸவம் பூர்த்தியடைந்தது.

T. S. சேஷாத்ரி தாஸன்

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வஜித் ஸ்ரீ பங்குனி (மீந) மீ

[13-3-48	30உ	சனிக்கிழமை	...	காரடையான் நோன்பு]
14-3-48	1உ	ஞாயிற்றுக்கிழமை	...	மீந சுக்ல சதுர்த்தி திதி
21-3-48	8உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
23-3-48	10உ	செவ்வாய்க்கிழமை	...	மீந சுக்ல த்ரயோதசி சதுர்த்தசி திதி த்வயம்
24-3-48	11உ	புதன்கிழமை	...	பங்குனி உத்திரம்; பௌர்ணமி திதி
25-3-48	12உ	வியாழக்கிழமை	...	ப்ரதமை திதி
4-4-48	22உ	ஞாயிற்றுக்கிழமை	...	மீந க்ருஷ்ண ஏகாதசி திதி
5-4-48	23உ	திங்கட்கிழமை	...	அதிதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்
6-4-48	24உ	செவ்வாய்க்கிழமை	...	மீந க்ருஷ்ண த்வாதசி திதி
9-4-48	27உ	வெள்ளிக்கிழமை	...	அமாவாஸ்யை
12-4-48	30உ	திங்கட்கிழமை	...	மீந சுக்ல த்ருதீயை திதி ; மேஷரவி 55-50. [மேஷ ஸங்க்ரமண தர்ப்பணம் மறுநாள்.

13—4—48 ஸர்வதாரி ஸ்ரீ சித்திரைமீ 1உ செவ்வாய்க்கிழமை மேஷ ஸங்க்ரமணம்] வருஷப் பிறப்புப் பண்டிகை. சூந்ய திதி, ஸங்க்ரமண தர்ப்பணம்.

ஸ்ரீ:

மதிப்புரை

1. அமலனாதிபிரான் அநுபவம்—இது, த்ராமிடவேத த்ரஷ்டாக்களுள் ஒருவரான ஸ்ரீ திருப்பாணாழ்வாரின் க்ருதி. இவரை நித்ய ஸூரிகளுள் ஒருவரான ஸ்ரீவத்ஸாழ்வானின் அவதாரமென்று பெரியோர்கள் சொல்வார்கள். இது பத்துப் பாசுரங்கள் அடங்கிய ஒரு க்ரந்தம். ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, ஸ்ரீ நைநாராசார்யர், ஸ்ரீ தேசிகன், என்னும் மூன்று ஆசார்யர்கள் இதற்கு வ்யாக்யாநங்களை அநுக்ரஹித்திருக்கிறார்கள். இக்ரந்தம் உபநிஷத்திலும் இதிஹாஸத்திலும் ஸ்ரீ பாகவதத்திலுமுள்ள ரஹஸ்யார்த்தங்களை அடக்கியுள்ள தென்பதை இந்த வ்யாக்யாநங்களில் விரிவாகக் காணலாம். ஆனால் அவை ஓரளவு வேதாந்தப் பயிற்சி யுடையாரால் மட்டும் பயின்று பயன் கொள்ளத் தக்கனவாய் உள்ளன. ஆதலின் அவற்றைப் பெரும்பாலும் தழுவிச் சுருங்கிய கால அளவில் அதிகச்ரம மின்றிக்கே யாவரும் பயின்று தெளிந்து பயனடையுமாறு வித்வான் ஸ்ரீ. உப. வே. வி. கோபாலாசார்ய ஸ்வாமி 'அமலனாதிபிரான் அநுபவம்' எனும் நூலை இயற்றியிருக்கிறார். அந்த ஸ்வாமியின் நன்முயற்சி மிகவும் பாராட்டத் தக்கதே. ஸ்ரீ கோபால. சார்ய ஸ்வாமி பூர்வ ஸுக்ருத மூல பகவத் ப்ரஸாதத்தால் சிறந்த ஜ்ஞாநம் பெற்றவர் அதனால் அவர் எழுதும் நூல்கள் எல்லாவற்றிலும் சில விசேஷார்த்தங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. இந்நூலிலும் அவை பல காணப்படுகின்றன. அவைகளை எடுத்துக் காண்பிக்க அவா விருந்தும் அவகாசாபாவத்தால் அந்த வ்யாபாரத்திலிருந்து மிச்ச வருத்தத்துடன் விரதாராகிறோம். ரஸிகர்கள் ஸ்வயமாகவே இந்நூலைக் கவனத்துடன் படித்து, அதிலுள்ள ஸ்வாதுவான ரஸங்களை அநுபவிப்பார்களென்று நாம் நம்புகிறோம். இதன் விலை ரூ. 1; இதனை, கீதாஞ்ஜலி ப்ரெஸ், புதுக்கோட்டை என்னும் விலாஸத்துக்கெழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

2. அத்புத சக்தி:—இதனை இயற்றியவர் ப்ரதிவாதி பயங்கரம் வித்வான் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி. இதன் விஷயம்:—எம்பெருமான் எங்கும் நிறைந்துள்ள பரம் ஜ்யோதிஸ் என்று வேதங்கள் கூறுகின்றன. அதாவது: மஹத்தான பதார்த்தங்களின் வெளியிலும் அணுவான பதார்த்தங்களி னுள்ளும் அவன் நிறைந்துளன் என்று சொல்லப் பட்டதாயிற்று. இது எப்படி ஸாத்யம்? அணுவான பதார்த்தங்களுக்கு உட்புறம் என்று வகுத்துக் காட்டக் கூடிய இடம் இல்லையே. அங்கு அந்தர் வ்யாப்தி எப்படி? அம்மாதிரியே மஹத்தான பதார்த்தங்களில் பஹிர்வ்யாப்தி என்று சொல்வது ஸாத்யமில்லையன்றோ! ஆகையால் வேதாந்திகளின் கொள்கையை ஒப்புக் கொள்ள இயலாது. இவ்வாறு ஆக்ஷேபமொன்று உண்டு. நிற்க: பகவானுடைய ஸ்வரூபம் முழுவதும் ஒரு பதார்த்தத்தில் வ்யாபித்திருக்கிற தென்று சொல்லிவிட்டால், மற்றும் உலகிலுள்ள வஸ்துக்களிலும் இது இருக்கிற தென்று எப்படிச் சொல்லக் கூடும்? இது மற்றுமொரு ஆக்ஷேபம். இம்மாதிரியான ஆக்ஷேபங்களுக்கு 'எம்பெருமானுக்கு அத்புதமான ஶக்தி உண்டு; ஆகையால் இவை பரஸ்பர விருத்தமாக இருந்தாலும், அவன் விஷயத்தில் அது இயலும்' என்று ஸமாதாநத்தை சாஸ்த்ரங்களே கூறுகின்றன. இந்த அத்புத சக்தி என்பதன் பொருள் என்ன வென்னும் விஷயத்தில் வைஷ்ணவர்களுக்குள் விவாதமுண்டு அப்படி விவதிக்கும் இரு கக்ஷிக்காரர்களுள் எவர்களுடைய கக்ஷி இரு கக்ஷிக்காரர்களுக்கும் பொதுவாக இருக்கும் ஆசார்யர்களுக்கு அபிமதம் என்பதை இந்நூல் விசாரிக்கின்றது. இதை மிக்க ரஸத்துடன் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி விசாரித்திருக்கிறார். ரஸிகர்கள் இதைப் படித்து ஆநந்தப்படக்கூடும். இதன் விலை அணா எட்டு. இதனை 'ஸ்ரீ அண்ணங்கராசார்யஸ்வாமி சின்ன காஞ்சீபுரம்' என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ. ந்ரு. ப்ரியா ஸம்பாதகர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் வித்வத் ஸதஸ் ஸமாம்

இவ்வர்ஷத்து வித்வத் ஸதஸ் திருநின்றவூர் எனும் திவ்யதேசத்தில் தைமீ 17௳ வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 26௳ ஞாயிற்றுக்கிழமை திநம் பூர்த்தி பெற்றது. அந்த ஞாயிற்றுக்கிழமையன்று, ஸ்ரீ அழகியசிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும் கொண்டாடப்பட்டது. அநேக வித்வான்கள் எழுந்தருளி ஸதஸ்ஸில் அந்வயித்தார்கள். அநேக ப்ரபுக்களும் அப்போதைக்கப்போது அவ்விடம் எழுந்தருளி உத்ஸவத்தின் பெருமையை அநுபவித்துப் போனார்கள். இவ்வுத்ஸவத்தின் பெருமை அடுத்த ஸஞ்சிகையில் விஸ்தாரமாக எழுதப்படும். இப்பொழுது ஒன்றை மாத்ரம் விண்ணப்பித்துக்கொள்ளத் துணிகின்றோம். இந்த வர்ஷத்து ஸதஸ் ஸம்பந்தமான ததீயாராதந பாரத்தைத் திருக்குடந்தை வங்கீபுரம் காளி ஸ்ரீ. உப. அண்ணாஸ்வாமியும், முக்கூர் ஸ்ரீ. உப. ராஜகோபாலாசார்ய ஸ்வாமியுமே வஹித்து அந்தக் கைங்கர்யத்தை நடத்திவைத்தனர். அப்பெருமை மிகவும் பாராட்டத் தகுந்ததாக இருந்தது. திருநக்ஷத்ரத்தன்று அவ்விடம் சற்றேறக்குறைய 2000 ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். எல்லாரும் மிகவும் த்ருப்தர்களாக உத்ஸவத்தை அநுபவித்தார்கள். அப்படி எல்லாரும் ஆநந்தத்துடன் அநுபவித்ததற்கு இந்த இரண்டு ஸ்வாமிகளின் பரிச்ரமமே முக்ய காரணம். இதன் விசேஷாம்சங்களை அடுத்த ஸஞ்சிகையில் விண்ணப்பித்துக் கொள்வோம்.

* * * *

உபாதாநோபாதேய பாவ லக்ஷணம்

(1) உபாதாநோபாதேய பாவத்தைப்பற்றி ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமி மறுபடியும் ஒரு லேகம் அநுக்ரஹித்திருக்கிறார். அதில் பூர்வோக்தமானதே புநருக்தமாயும், சில ப்ரமாண வாக்யங்கள் ஸம்ஸ்க்ருதத்தில் உதாஹரிக்கப்பட்டு அதுவே தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டிருந்தபடியாலும், பத்ரிகையில் அவகாசமிராமலிருப்பதை உத்தேசித்து அந்த லேகத்தில் அதிரிக்தாம்சங்களை விட்டுவிட்டு மற்றவைகளை மாத்ரம் வெளியிட்டிருக்கிறோம். அந்த அபராதத்தை அந்த ஸ்வாமி க்ஷமித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ப்ரக்ருதத்தை அநுஸரிப்போம். அந்த லேகத்தில் அந்த ஸ்வாமி, 'ச்ருதி வாக்யங்களாலேயே ப்ரஹ்மத்திற்கும் ஜகத்திற்கும் உபாதாநோபாதேய பாவம் ஸித்தமாக இருக்கையில், ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் எதற்காக யுக்தியை அவலம்பித்து ஒரு புதிய லக்ஷணத்தை ஏற்படுத்துகிறார்?' என்று அடியேன் கேட்பதாக வைத்துக்கொண்டு, அதற்கு ஸமாதாநமாக, ச்ருதிக்கு அவிருத்தமான யுக்தி க்ராஹ்யமே என்றும், அப்படியே பூர்வாசார்யர்கள் அநேக ஸ்தலங்களில் யுக்தி உபபாதநத்தால் ச்ருதிஸித்த விஷயங்களை த்ருடீகரித்திருக்கிறார்களென்றும், பஹுவாக விஸ்தரித்து உபபாதித்திருக்கிறார். இது அநாவச்யகம். அடியேன் அம்மாதிரி ஆக்ஷேபிக்கவில்லை. 'ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரருடைய லக்ஷணம் அந்த ஸ்வாமியால் உத்தேசிக்கப்படும் லக்ஷ்யங்களெல்லாவற்றிலும் வ்யாபிக்கவில்லையே! அப்படிப்பட்ட லக்ஷணத்தை எதற்காக ஏற்படுத்தவேண்டும்?' என்பதே அடியேனுடைய ஸம்சயம். த்ரவ்யைக்யமிராமல் பிந்நங்களாயிருக்கும் த்ரவ்யங்களுக்கும் உபாதாநோபாதேயமுண்டு என்பதை ஸ்தாபிப்பதற்கன்றோ அவருடைய லக்ஷணம் ஏற்படுத்தப்பட்டது? பூர்வாவஸ்தையில் விசேஷணமாயிருக்கும் அசேதநாம்சமும் உத்தராவஸ்தையிலுள்ள விசேஷ்யாம்சமாகிற சேதந ப்ரஹ்மமும் பிந்நங்களானவை. ஸ்ரீ உபநிஷத்காரரின் லக்ஷணப்படி இவைகளுக்கு உபாதாநோபதேய பாவம் சொல்லியாகவேண்டும். அது அத்யந்தம் அஸங்கதம். ஆகையால் அந்த லக்ஷணம் தோஷதுஷ்டம். அதை எதற்காக ஏற்படுத்தினார்? இதுதான் அடியேனுடைய ஸம்சயம் ஆனால் அவைகளுக்கு அப்படிப்பட்ட ஸம்பந்தமில்லையோவென்று கேட்கலாம். ச்ருதியுக்த லக்ஷணப்படி விசிஷ்டாகாரேண அந்த ஸம்பந்தமுண்டு என்பதை ஸ்தாபிக்கலாம்.

நிற்க, ஸ்ரீ உபநிஷத்காரரின் லக்ஷணம் [[illegible]] என்பது 'பூர்வாவஸ்தா யோகம் எதற்கு இருக்கிறதோ அதுவே உத்தராவஸ்தா யோகத்தைப் பெற்றால் அது உபாதேயமாகின்றது' என்னும் பொருளைக்கொடுக்கக்கூடியதாகவே இருக்கின்றதன்றோ? ம்ருத்பிண்டம் முதலில் பிண்டத்வமாகிற பூர்வாவஸ்தையை உடையது. அதுகடமாக மாறின பிற்பாடு, உத்தராவஸ்தா யோகி ஆகிறது. ஆகையால் அவைகளுக்கு உபாதாநோபாதேய பாவம் சொல்லலாம். பூர்வாவஸ்தா யோகியான ம்ருத் பிண்டத்தை உத்தராவஸ்தா யோகியான நக நிக்ருந்தநத்திற்கு உபாதாநமென்று சொல்லக்கூடுமோ? ஆகையால் ஸ்ரீ உபநிஷத்காரர் லக்ஷணத்திலும் த்ரவ்யைக்யம் ஒத்துக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. அப்பொழுது 'அபிந்நங்களுக்குத்தான் உபாதாநோபாதேய பாவம் என்னும் நியமமில்லை' என்று எப்படிச் சொல்லலாம்? ஸ்வோக்தியே விரோதிக்கிறதுபோல இருக்கிறதே.

(2) இந்த விஷயத்தைப் பற்றிப் பம்பாயிலிருந்து ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியும் ஒருலேகத்தை அனுப்பியிருக்கிறார். அதுவும் இந்த ஸஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. எந்த விஷயம் விசாரிக்கப்படுகிறதோ அது விசாரிக்கப்படாமல், உபஸம்ஹாரத்தில் மாத்ரம் அது ப்ரஸ்தாவிக்கப்பட்டு

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

இந்த லேகம் முடிகிறபடியால், அதைப்பற்றி அடியேன் எதுவும் விஜ்ஞாபித்துக் கொள்ள இடமில்லையென்று அதைப்பற்றி எதுவும் ப்ரஸ்தாவியாமல் விரமிக்கின்றேன்.

* * * * *

மஹாத்மா காந்தியிஜின் மரணம்

ஜகத் விச்ராந்தமான யசஸ்ஸை உடைத்தாயிருந்த மோஹநதாஸ் கர்மச்சண்ட் காந்தி என்பவர் சென்ற ஜனவரி ஸ்ரீ 30உ வெள்ளிக்கிழமை ஸாயம் 5-30 மணிக்கு ஒரு துஷ்டனால் சுடப்பட்டு மரண மடைந்தார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கின்றோம். அவர், நிதம் ஸாயம் 5-மணிக்கு ஒரு ஜந ஸங்கத்தின் முன் பகவத் பஜனை செய்வது வழக்கம்; அந்தக் காலத்தில் அங்கு வந்திருக்கும் ஜநங்களுக்கு ஸதுபதேசம் செய்வதுண்டு. அந்த வழக்க ப்ரகாரம் அன்று ஸாயம் புறப்பட்டுப் போனவரை, பஜனை மேடையில் ஏறுவதற்கு முன்னதாக ஒரு மஹாராஷ்ட்ர மனிதன் எதிர் வந்து நமஸ்கரித்துவிட்டு, ‘ஏன் இன்று கொஞ்சம் விளம்பித்து வருகிறீர்கள்?’ என்று கேட்டுவிட்டு, அதற்கு அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே தனது கையிலிருந்த துப்பாக்கியினால் நாலு குண்டுக்களைச் சுட்டான். அந்தக் குண்டுக்கள் காந்திஜியின் மார்பில் பட்டதும் அவர் ப்ரஜ்ஞையிழந்து கீழே விழுந்தார். சுற்றியிருந்த ஒருவருக்கும் க்ஷண காலம் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. சிறிது நேரம் சென்றதும் காந்திஜி ஆவி துறந்தார். அப்பொழுதே அந்தத் துஷ்டனைப் பிடித்துப் போலீஸ்காரரிடம் எல்லாரும் ஒப்புவித்துவிட்டார்கள். இம்மாதிரி பகவத் பஜனையை உத்தேசித்துப் புறப்பட்டுப் போகுங் காலத்தில் இப்படி ஒரு ஸம்பவம் நேர்ந்ததென்பது நமது துயரத்தை அதிகமாக்குகின்றது.

காந்திஜி என்பவர், ஸ்ரீராமசந்த்ரன் காலத்தில் தண்டகாரண்யத்தில் வஸித்து வந்த மஹர்ஷிகள் போன்ற ஒரு மஹான்; ஸம்ப்ரக்ஷாளர்கள் என்றும் மரீசிபர்களென்றும் பத்ராஹாரர்களென்றும் அநேக யோகிகள் வ்ரதோபவாஸபரர்களாகத் தண்டகாரண்யத்தில் வஸித்துவந்தார்களென்று ஸ்ரீ ராமாயணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்கள் போலவே இவரும் உபவாஸபரர்; தபோநித்யர்; த்ருடயோகர்; மிக்க சாந்தி க்ஷமை தயை ஆர்ஜவம் முதலிய நற்குணங்களுடன் கூடினவர். இந்த ஸம்பவம் நேர்வதற்கு ஸ்வல்ப திநங்கள் முன்னதாக ஒரு தீவ்ர உபவாஸத்தில் இவர் ப்ரவர்த்தித்தார். ‘வயஸ் அதிகமாகிவிட்டது; இனி இம்மாதிரி உபவாஸம் கூடாது’ என்று அப்போது பல ஸுஹ்ருத்துக்கள் ப்ரார்த்திக்க, அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி அவர்களுடைய மநஸ்ஸுக்கு அத்ருப்தியை ஜநிப்பிக்கக்கூடாதென்று எண்ணி அந்த உபவாஸத்தை நிறுத்தினர். அந்த உபவாஸத்தை நிறுத்தாமல் அவர் அந்த உபவாஸம் காரணமாக ப்ராண வியோகம் அடைந்திருக்கும் பக்ஷத்தில் நமக்கு இவ்வளவு துக்கம் ஒருகால் உண்டாகியிருக்கமாட்டாதோ என்று தோன்றுகிறது. ஜப காலத்தில், கொஞ்சமேனும் எதிர்பார்க்கப்பட மாட்டாமலிருந்த

ஸமயத்தில், இவ்வாறு நேர்ந்ததே என்பதுதான் அதிகமான ஸோகத்திற்குக் காரண மாகின்றது. தன்னை நமஸ்கரித்த துஷ்டனுக்கு ப்ரதிவந்தநமாக அவர் உயரத் தூக்கின அஞ்ஜலி, அவர் கீழே விழுகையிலும் அப்படியே இருந்ததாம். அப்பொழுது அவருடைய வாக்கில் ராம நாமமே விளங்கிக்கொண்டிருந்ததாம்.

இந்தக் காந்திஜி ஒரு வைச்யர். குஜராத்தில் இவருடைய பிறப்பு. இந்த வர்ஷம் அவருக்கு 79-வது வயஸ் முடிகின்றது. இவர் பிறந்த வம்ஸம் த்ருடமான தைவ பக்தியுள்ள வம்ஸம். இவரிடத்தில் அந்தப் பக்தி பூர்ணமாக ஸங்க்ரமித்திருந்தது. பால்யத்தில் மற்றவர்கள்போல் ஆங்கில பாஷையை அப்யஸித்தார். பிறகு வக்கீலாகப் போகவேண்டுமென்று எண்ணி இங்க்லாந்து தேஸம் போய் அவ்விடத்தில் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துவிட்டு, பாரிஸ்டர் பட்டத்துடன் இந்தத் தேஸத்திற்குத் திரும்பிவந்தார். அந்தப் பட்டத்துடன் அவர் இவ்விடத்திலேயே வக்கீலாக ஜீவநம் செய்திருக்கும் பக்ஷத்தில் அவர் பெரிய வக்கீலாக ஜநங்களால் கொண்டாடப்பட்டு அளவற்ற தநத்தைத் திரட்டியிருப்பார். அவருக்கு அதில் நோக்க மில்லை. அவர் வக்கீலாகத் திரும்பிவந்த காலத்தில் தென்ஆப்ரிக்கா என்னும் தேஸத்தில் பெரியதொரு அட்டூழியம் நடந்து வந்தது. நமது தேசத்திலிருந்து அநேக ஏழை ஜநங்கள் ஜீவநார்த்தம் அவ்விடம் போய்க் குடியேறிக், கூலிவேலை செய்வது, வ்யாபாரம் செய்வது, முதலிய பல தொழில்களில் ப்ரவர்த்தித்து ஜீவித்துக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் ஏற்கெனவே குடியேறி யிருந்த வெள்ளைக்காரர்கள் தமது பராக்ரமத்தால் அந்த ஏழை ஜநங்களை பலவிதமாக ஹிம்ஸித்து வந்தார்களாம். அந்த ஸமாசாரம் இந்தத் தேஸத்திற்கு எட்டிற்று. அந்த அட்டூழியத்தை நிறுத்தி அந்த ஏழை ஜநங்களுக்கு ஸௌக்யத்தை ஸம்பாதித்துக்கொடுக்கவேண்டும் என்னும் எண்ணம் இவருடைய மநஸ்ஸில் தீவ்ரமாகத் தோன்றிற்று. இவ்விடத்தில் தாம் செய்துவந்த வக்கீல் தொழிலை த்யஜித்துவிட்டு, உடனே தாம் அந்தத் தென் ஆப்ரிக்கா தேஸத்திற்குப் புறப்பட்டுப் போனார். அவ்விடம் போய்ச் சண்டை செய்வது என்னும் எண்ணத்துடன் அவர் புறப்படவில்லை. "வராகு ஊஷ்வை ஊஹ ரொஅதெ" என்று கோஷித்த சிறிய திருவடியின் கோஷ்டியை இவர் சேர்ந்தவராக இருக்கும் பக்ஷத்தில் இவரும் அப்படியே உத்கோஷித்துக் கொண்டு கிளம்பியிருப்பார். அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவ ரல்லர் இவர். ஸாம உபாயத்தினாலேயே அந்த வெள்ளைக்காரர்களை வஸீகரித்தல் வேண்டுமென்பதே இவருடைய கருத்து. 'ஸகல ப்ரஜைகளும் பகவானுக்குப் புத்ரஸ்தாநீயர்கள்; ஆகையால் ஸகல ப்ரஜைகளும் ஸௌப்ராத்ரத்துடன் வர்த்தித்து வருதல் வேண்டும்' என்பதே இவருடைய கொள்கை. அந்த மநோபாவம் அவருக்கு ஸ்வாபாவிகமாவே இருந்ததென்று சொல்ல வேண்டும். அது வந்தேறியாக இருக்கும் பக்ஷத்தில் சிற்சில ஸந்தர்ப்பங்களில் அது மறையும். இவருடைய வாழ்நாள் முழுவதிலும், அத்யந்த தீவ்ரமான கஷ்டங்கள் நேர்ந்த காலத்திலும், இந்த ஆத்ம குணம் இவரை விட்டு விலகாமலே நின்றது. இதனால் தான் அவருக்கு 'மஹாத்மா' என்னும் பட்டத்தை ஜனங்கள் கொடுத்தார்கள். அம்மாதிரியான அத்வேஷம் புத்தரிடத்திலும் ஏசுநாத ரிடத்திலும் மற்றும்

இவர்களைப் போன்ற சில மஹான்களிடத்திலும் இருந்ததென்று நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் அந்தக் குணம் நீடித்த காலம் அவர்களிடம் இருந்து, அவர்கள் அதை விடாமலே கைக்கொண்டு வந்தார்கள் என்பதும், அந்த அத்வேஷத்தாலேயே அநேக துஷ்டர்களை அவர்களுடைய தௌஷ்ட்யத்திலிருந்து திருப்பினார்கள் என்பதும் அவர்களிடம் காணப்படவில்லை. ஆப்ரிக்கா தேஸம் போய்க் காந்திஜீ அங்கிருந்த வெள்ளைக்காரர்களுடன் கலந்து வந்தபொழுது அவர்களால் பலவிதமாக உபத்ரவிக்கப்பட்டும், அவர் அந்த உபத்ரவங்களை உபத்ரவங்களாக நினையாமல் ஆச்சர்யகரமான விடாமுயற்சியுடனும் உண்மை யான ப்ரீதியைமுன்னிட்டும் அவர் அந்த ஸத்ருக்களை மித்ரர்களாக மாற்றின கதை பெரிய சரித்ரமாகும்.

இவ்வாறு அந்த விதேசத்தில் சற்றேறக்குறைய 10, 12 வர்ஷ காலம் ச்ரமப்பட்டுவிட்டுப் பிறகு ஸ்வதேஸமாகிற நம் இந்தியாவில் ஆங்க்ல தேஸத் தார் இந்தியர்களை சிற்சில ப்ரகாரங்களில் அநீதியுடன் நடத்துகிறார்க ளென்று கேள்விப்பட்டு இந்தத் தேஸத்திலும் நமது ஏழை ஜனங்களின் கஷ்டங்களை நிவர்த் திக்கவேண்டுமென்று எண்ணி அவர் இந்தத் தேஸம் திரும்பி வந்தார். இவ்விடத் திற்கு வந்து அவர் காங்க்ரெஸ் கக்ஷிக்காரர்களைச் சேர்ந்ததும், வெள்ளையர் ராஜ்யத்தை எதிர்த்ததும், அந்த எதிர்ப்பின் பயனாகத் தாம் பல தடவை காராக்ருஹம் ப்ரவேஸித்ததும், இவையெல்லாம் ஸுப்ரஸித்தமான விஷயம். 200 வர்ஷ காலமாக இந்தத் தேஸத்தை ஆக்ரமித்துக்கொஞ்சம் கொஞ்சமாக ஸ்திர ப்ரதிஷ்டையையும் மஹத்தான த்ரவ்ய லாபத்தையும் ஸம்பாதித்துக் கொண்டிருந்த ஆங்க்ல தேஸத்து ராஜாங்கத்தார், இவருடைய வேண்டு கோளுக்கு இணங்கித் தமக்குப் பரம ஸ்வாதீனமாகவும் அத்யந்தம் லாபகரமாக வும் இருந்த இந்த ராஜ்யத்தை விட்டு விட்டு மூட்டையும் முடிச்சுமாகத் தமது ஊருக்குப் போய்விட்டார்களென்றால், இவருடைய தபோ பலம் எவ்வளவு இருக்கவேண்டும்? இந்தப் பர்யவஸானம் இரண்டொரு நாளில் ஸாதிக்கப்பட வில்லை. காந்திஜீ இதில் வந்து புகுந்தது முதல் சென்ற வர்ஷ பர்யந்தம் [அதா வது: சற்றேறக் குறைய 30 வர்ஷ காலம்] இந்தத்தேஸத்தைப் பிறருடைய ஆக்ரமத்திலிருந்து விடுவிக்கவேண்டுமென்று காந்திஜீ செய்த தபஸ்ஸின் பல மன்றோ இப்பொழுது கிடைத்திருக்கும் முடிவு? உண்மையாக, எவ்வித வஞ்சனையுமின்றிக்கே தைவத்தை நம்பி ஜகத்திற்கு ஹிதமான ஒரு நற்கார்யத் தில் நாம் ப்ரவர்த்தித்தால் அந்தக் கார்யத்தை ஈச்வரன் தலைக்கட்டி வைப்பன் என்பதில் ஆக்ஷேப மில்லை. இதற்குக் காந்திஜியே நிதர்ஸனமாவர்.

காந்திஜீ ஒரு பெரிய தைவ பக்தர். ருஜுவான அந்தப் பக்தியே ஆங்கில தேஸ அரசாங்கத்தாரின் மனஸ்ஸில் புகுந்து, அவர்களை இவ்வளவு உதாரமான தர்ம கார்யத்தில் துணியும்படி செய்தது என்று சொல்லவேண்டும். அந்த ஆங்க்ல தேஸத்தார் இம்மாதிரி தர்மத்திற்குக் கட்டுப்பட்டு ஔதார்யத்துடன் நடந்து கொண்டாரென்பதும் அத்யாச்சர்யமே. இக்காலத்தில், தனக்கு ஸ்வாதீனமாக ஒரு அல்ப த்ரவ்யம் அகப்பட்டால் ஒருவனும் அந்த த்ரவ்யத்தை தர்மத்துக்கு

கட்டுப்பட்டு விட்டுக் கொடுக்கமாட்டானன்றோ? அப்படி இருக்கையில் 200 வருஷ காலமாகத் தாம் ஸம்பாதித்த இந்த ராஜ்யத்தைத் தம்மைப் பராக்ரமத்தால் ஒருகாலும் ஒருவராலும் வெளிப்படுத்த முடியாது என்பது நன்றாகத் தெரிந்திருக்கையிலும், தாமே தர்ம எண்ணத்துடன் பிறரிடம் ஒப்புவித்துவிட்டுப் போவார் என்பது நம்மால் எதிர்பார்க்கக்கூடியதா? அந்த ஆங்க்ல ராஜ்யத்தாருடைய தர்மபுத்தியையும் நாம் மிக்க க்ருதஜ்ஞதையுடன் கொண்டாட வேண்டியது ப்ராப்தம்.

இந்தத் தேசத்திலிருக்கும் வைதிகர்களுக்கு இவரிடம் ஸ்வல்ப குறையுண்டு. 'இவர் பெரிய யோகியாக இருக்கையிலும் இவருக்கு சாஸ்த்ரங்களில் விச்வாஸமிராமற்போய்விட்டதே' என்று அவர்கள் முறையிடுகிறார்கள்.

"യദ്യപ്യശേഷാ ന ബഭൂവാനു ഹൃദയംവശേഷ്വഃ ।"

என்பதுபோல, ஒரு பக்கத்தில் அவருடைய ஆத்ம குணத்தைப் போற்றியும் மற்றொரு பக்கத்தில் அவருடைய சாஸ்த்ர விருத்த நடவடிக்கைகளை வெறுத்தும் பேசுகிறார்கள். நாமோ "ഏകൊ ഹിദൊഷൊ ഗുണസന്നിപാതെ നിമജ്ജതി" என்னும் ப்ரகாரம் அவருடைய குணங்களின் பெருமையையே பாராட்டுகிறோம். இவர் பூர்வ ஜந்மத்தில் மஹான்களுடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாக இருந்திருத்தல் வேண்டும். ஏதோ ஒரு கர்ம மடியாக சாஸ்த்ரத்தில் சிறிது அவநம்பிக்கை ஜனித்திருக்கலாமென்று நினைக்க இடமுண்டு. எப்படி இருந்தாலும் அவருடைய ஆத்மாவுக்கு நல்ல கதியுண்டு என்பதினும் அவருடைய மறைவு உலகத்துக்கே பெருத்த நஷ்டமென்பதிலும் கிஞ்சித்தும் ஸந்தேஹமில்லை.

ஸூத்ர :—அடா! என்ன ஆத்ரம்! சற்றுப் பொறு. அதன் பிறகு பராங்குஶ முனிவரும் தமது கனவைச் சிந்தித்து அத்யாச்சர்ய மடைந்தார். பகவந் நியமனத்தை நினைத்து நினைத்துப் பூரித்தது அவர் உள்ளம். அக்ஷணமே அதி சீக்ரமாக ஸ்ரீ இளங்காட்டு ஸ்வாமியை வரவழைத்து யதிராஜ பதவியில் நியமித்தருளினார். அந்த ஸமயம் ஸ்வாமிக்கு என்ன திருநக்ஷத்ரம் என்று எண்ணுகிறாய்? இருபத்தைந்துதான்.

நடன் :—[இடை மறித்து மிக்க வியப்புத் தோன்ற] ஆஹா! இது என்ன! அது எவ்விதம் ஸாத்யம்? கனவிலும் நினைக்க வொண்ணாத ஸம்பவம்! அதி பால்யம். இவ்வயதில் இந்த்ரிய நிக்ரஹம் செய்வது எத்தகைய கஷ்ட ஸாத்யம்? பரிபக்வ ஞான மடைவதோ முதலே துர்லபம். இவ்வித மிருக்க: இந்த ஸாஹஸச் செய்கையை ஏற்றுக்கொள்ள எவ்விதம் அவ்விளங்காட்டு ஸ்வாமி ஸம்மதித்தார்?

ஸூத்ர :—ஸர்வேச்வரன் நினைத்தால் எதுதான் அஸாத்யம்? அனைத்தும் பகவத் ஸங்கல்பந்தான். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அவர் கனவிலும் தோன்றி மிகவும் கருணையுடன், 'பிள்ளாய்! நீ இப்பொழுதே ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றுக்கொள்ளக் கடவாய். நீ ஆராதநம் புரிவதே எனது மனத்திற்கு உவப்பு' என்று ஆஜ்ஞாபித்தார். ஸ்ரீ ந்ருஸிம்ஹன் மனமகிழ்ந்து இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியாம லிருப்பதற்கு எவர் மனந்தான் துணியும்! அக்ஷணமே ஸ்வல்பமும் தயக்கமும் கலக்கமு மின்றிப் பரமாநந்தம் பொங்கப் பராங்குஶ முனிவரின் சிஷ்ய பதவியை ஏற்றார் ஸ்வாமி.

நடன் :—[ஆச்சர்யமும் பஹுமாநமும் தோன்ற] இச்சரிதம் அத்யந்தம் அத்புதம். உலகில் எவருக்கு இத்தகைய பரமபாக்யம் கிட்டும்? எத்தகைய தபோமஹிமை! எம்பெருமானே திருவுள்ள முவந்து ஒருவரை யதிராஜ பதவியில் நியமிப்ப தென்பது ஸாமாந்யச் செய்கையா? எவர்க்குக் கிட்டும் இந்த அத்ருஷ்டம்?

ஸூத்ர :—ஆம்; வாஸ்தவம்; அதிலென்ன ஸந்தேஹம்? அம்மஹா தேசிகன் அத்யாச்சர்ய சக்தி வாய்ந்தவர். அவர் ஞானமும் பாண்டித்யமும் ஸுப்ரஸித்தம். ஏககாலத்தில் நூறு எழுத்தாளர்களுக்குச் சற்றுந் தாமத மின்றிக் காவ்ய விருந்து வழங்கும் ஸாமர்த்யம் வாய்ந்த வள்ளல். இம்மஹானல்லவா எம்பெருமான் திவ்ய லீலைக ளமைந்த 'வாஸந்திகா பரிணயம்' என்னும் ஸரஸ நாடகத்தைச் செய்தருளியவர்! அன்றியும் நம்மை ஒரு பொருளாக மதித்து அதை நடிக்குமாறு நியமித்தருளி அதை நமது கையில் அளித்தார்.

நடன் :—ஆம்; இதில் எனக்கு ஒரு ஸந்தேஹம். இவர் தர்க்கத்தில் புலி; வ்யாகரணத்தில் ஸிம்ஹம். இது உலக ப்ரஸித்த மாயிற்றே. அவ்வித

மிருக்க, அதிகடிநமாகிய அவர் வாணியானது எவ்விதம் ஸகல ஜனங்களும் கொண்டாடும் வண்ணம் மிகவும் ஸரளமாகிய ஸாஹித்ய வடிவை அடைந்தது?

ஸூத்ர:—இதில் என்ன ஆச்சர்யம்? அவர் வாக்குத் திறமையின் வைபவத்தைக் கூறுகிறேன் கேள். தர்க்கத்தில் வாதிக்கும்போது கரடு முரடாகக் காணப்படும் வாக்கானது, கவநத் துறையில் இறங்கும்பொழுது கர்ணாம்ருதமாக மாறுகிறது. இதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்; அது ப்ரஸித்தம். அதை நீ கேள்விப்பட்டும் இருக்கலாம். கோகிலத்தின் இனிய காநமானது நாயக நாயகிகள் பிரிந்து வருந்தும் ஸமயத்தில் (விச்லேஷ தசையில்) பேரிடியையும் வஜ்ராயுதத்தின் தொனியையும் காட்டில் கர்ண கடூரமாகத் தோன்றுகிறது. அதே காநம் தம்பதிகளின் சேர்க்கையிலோ (ஸம்ச்லேஷ தசையில்) யாழோ குழலோ எனத் திகைக்கும் வண்ணம் கர்ணாம்ருதமாக மாறுகிறது. ஆகையினாலேயே உலகில் ஸ்வாமிக்குக் கவிதார்க்கிக ஸிம்ஹம் என்னும் பிருது வழங்குகிறது.

நடன்:—ஆம்; இது நல்ல நிதர்சநம். இம்மஹா தேசிகனின் வாக்கானது சேரக்கூடிய சேர்க்கை யென்றே புகலவேண்டும். இல்லையேல் இத்தகைய ஸரஸ நாடகம் எவ்விதம் அமையும்?

ஸூத்ர:—அதில் என்ன ஸந்தேஹம்? சேரக்கூடிய சேர்க்கை யென்று கூறவும் வேண்டுமோ? ஏனெனில்: இப்பொழுது ஸகலமும் பொருந்தி அமைந்திருக்கிறதைப் பார். நாமோ, நாடகம் நடிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர்கள். ஸபையை அலங்கரித்திருக்கும் மஹான்களோ, குற்றத்தை நீக்கிக் குணத்தை க்ரஹிக்கும் ஸ்வபாவ முடையவர்கள். இந்நாடகத்தைச் செய்தருளிய யதிகுல திலகரோ, ஸரஸ கவநம் செய்வதில் அத்யந்தம் ரஸிகத்தன்மை வாய்ந்தவர். கதையோ, மிகவும் அத்புதமாகிய லக்ஷ்மி ந்ருஸிம்ஹனின் லீலைகளை உட்கொண்டது; மேலும் ச்ருங்கார ரஸத்தை ப்ரதாநமாக உடையது. ஆகையால் தத்ஸமயம் நம் அத்ருஷ்ட வசத்தினாலல்லவோ நமக்கு இத்திவ்ய நாடகம் கிடைத்துள்ளது?

[உடனே திரையின் பக்கம் நோக்கி] நடீ! தாமத மேன்? இக்காலத்துக்கு ஏற்பக் கீதம் பாடக் கடவாய். [பாடுகிறாள்] [வஸந்தகாலம்—மந்த மாருதம் வீசுகிறது. வழிப்போக்கனை வேட்டையாடுவதான விளையாட்டையுடையவனும், வஸந்த காலத்தை அநுபவிப்பதில் ஆவலுடையவனுமான மாருதனானவன் மலய பர்வதத்திலிருந்து மெதுவாகக் கீழே இறங்கி வருகிறான்.]

ஸூத்ர:—ஆஹா! மிக்க ச்லாக்யம். ஸமயத்துக்குத் தக்க காநம். இக்கீதமானது வேட்டையாடச் சென்றிருக்கும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவிப்பதன் பொருட்டு அம்பர வீதியினின்று இறங்கிவரும் இந்த்ரனுக்கு நல்வரவு கூறும் கீதத்திற்கு மிகப் பொருத்தமாகவன்றோ இருக்கிறது! ஸரி

நல்லது, இனி நாம் மேற்கொண்டு செய்யவேண்டிய கார்ய க்ரமங்களை ஸித்தப் படுத்துவோம்,

[அனைவரும் திரைக்குள் செல்கின்றனர்.]

முன்னுரை முற்றிற்று.

முதல் அங்கம்—இரண்டாம் காட்சி.

[ரதத்தில் மஹேந்த்ரனும் ஸாரதி மாதலியும் இரங்கத்தில் தோன்றுகின்றனர்.]

மஹே:—அப்பா மாதலீ! ரதம் என்ன இவ்விதம் ஊர்கின்றதே; சற்று விரைவாகச் செல்லட்டும்; அத்யந்தம் அவஸரம். கருடாசாலத்தில் நித்ய வாஸம் செய்யும் சிங்கப்பிரானின் அபிகமந ஆராதந காலம் மீறிவிடும். ஆகவே அதற்குள் சென்று எம்பெருமானின் திவ்ய ஸேவையை ஸேவிக்க வேண்டும்.

[மாதலி லகானைப் பிடித்து இழுத்துக் குதிரையை வேகமாக ஓட்டுகிறான்.]

மஹே:—ஸாரதீ! குதிரைகள் காற்றினும் கனவேகமாய்ப் பறக்கின்றனவே! அடாடா! ஸாரத்யத்தில் உன் திறமையே திறமை! இவ்வேகத்தில் ப்ரக்ருதி தேவதையின் ஸௌந்தர்யம் தான் என்ன! இதோ பார் ஆகாயத்திலிருந்து தேவகங்கை ஓடிவரும் வேகத்தை. நம்முடன் கூடவே வழி நடப்பது போல் அன்றோ தோன்றுகிறது? அவள்மேல் மிதக்கும் நறுமணம் கமழும் பாரிஜாத புஷ்பத்தைப் பார்த்தாயா? நம்மைப் போலவே தேவ லோகத்திலிருந்து எம்பெருமானை ஆராதிக்கத் தீர்த்தமும் புஷ்பமும் கொண்டுவருகிறாள் போலும்! மற்றொரு ஆச்சர்யம் பார். நமது ஆகாய விமாநமானது அதிவேகமாய்க் கீழிறங்கி வரும்போது எத்தகைய விசித்ர தோற்ற மளிக்கிறது? பூதேவியானவள் நம்மை எதிர் கொண்டழைக்கத் தேவலோகத்தை நோக்கி விரைந்து வருவதுபோல் அல்லவோ தென்படுகிறாள்?

மாதலி:—ஆஹா! என்ன ஆச்சர்யம்! எவ்வளவு சீக்ரம் நாம் இறங்கியிருக்கிறோம்! சந்த்ர மண்டலம் ஸூர்ய மண்டலம் நக்ஷத்ர மண்டலம் அனைத்தையும் தாண்டி வந்து விட்டது நம் விமாநம்.

[ஸமீபத்தில் சுற்று முற்றும் நோக்கி]

மஹே:—என்ன அழகு! என்ன அழகு! நிலமங்கையின் ஸௌந்தர்யத்தைச் சற்றே கவனி. "அதோ எதிரில் காணப்படும் பர்வதங்கள் மரங்கள் நதிகள் இவைகளால் சூழப்பட்டுப் பூமியானது சில இடத்தில் குறுகியும் சில இடத்தில் விஸ்தாரமாயும் விளங்குவதைப் பார்த்தால், சிறியனவும் பெரியனவுமான பற்பல வேர்கள் விழுதுகள் விழுந்து ஆங்காங்கு சித்ர விசித்ரமாய்ப் பந்தல்போல் பரவி நிற்கும் ஓர் அழகிய பெரிய ஆலமரம்போல் அல்லவோ விளங்குகின்றது?"

மிருக்க, அதிகடிநமாகிய அவர் வாணியானது எவ்விதம் ஸகல ஜனங்களும் கொண்டாடும் வண்ணம் மிகவும் ஸரளமாகிய ஸாஹித்ய வடிவை அடைந்தது?

ஸூத்ர:—இதில் என்ன ஆச்சர்யம்? அவர் வாக்குத் திறமையின் வைபவத்தைக் கூறுகிறேன் கேள். தர்க்கத்தில் வாதிக்கும்போது கரடு முரடாகக் காணப்படும் வாக்கானது, கவநத் துறையில் இறங்கும்பொழுது கர்ணாம்ருதமாக மாறுகிறது. இதற்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்; அது ப்ரஸித்தம். அதை நீ கேள்விப்பட்டும் இருக்கலாம். கோகிலத்தின் இனிய காநமானது நாயக நாயகிகள் பிரிந்து வருந்தும் ஸமயத்தில் (விச்லேஷ தசையில்) பேரிடியையும் வஜ்ராயுதத்தின் தொனியையும் காட்டில் கர்ண கடூரமாகத் தோன்றுகிறது. அதே காநம் தம்பதிகளின் சேர்க்கையிலோ (ஸம்ச்லேஷ தசையில்) யாழோ குழலோ எனத் திகைக்கும் வண்ணம் கர்ணாம்ருதமாக மாறுகிறது. ஆகையினாலேயே உலகில் ஸ்வாமிக்குக் கவிதார்க்கிக ஸிம்ஹம் என்னும் பிருது வழங்குகிறது.

நடன்:—ஆம்; இது நல்ல நிதர்சநம். இம்மஹா தேசிகனின் வாக்கானது சேரக்கூடிய சேர்க்கை யென்றே புகலவேண்டும். இல்லையேல் இத்தகைய ஸரஸ நாடகம் எவ்விதம் அமையும்?

ஸூத்ர:—அதில் என்ன ஸந்தேஹம்? சேரக்கூடிய சேர்க்கை யென்று கூறவும் வேண்டுமோ? எனெனில்: இப்பொழுது ஸகலமும் பொருந்தி அமைந்திருக்கிறதைப் பார். நாமோ, நாடகம் நடிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர்கள். ஸபையை அலங்கரித்திருக்கும் மஹான்களோ, குற்றத்தை நீக்கிக் குணத்தை க்ரஹிக்கும் ஸ்வபாவமுடையவர்கள். இந்நாடகத்தைச் செய்தருளிய யதிகுல திலகரோ, ஸரஸ கவநம் செய்வதில் அத்யந்தம் ரஸிகத்தன்மை வாய்ந்தவர். கதையோ, மிகவும் அத்புதமாகிய லக்ஷ்மி ந்ருஸிம்ஹனின் லீலைகளை உட்கொண்டது; மேலும் ச்ருங்கார ரஸத்தை ப்ரதாநமாக உடையது. ஆகையால் தத்ஸமயம் நம் அத்ருஷ்ட வசத்தினலல்லவோ நமக்கு இத்திவ்ய நாடகம் கிடைத்துள்ளது?

[உடனே திரையின் பக்கம் நோக்கி] நட! தாமத மேன்? இக்காலத்துக்கு ஏற்பக் கீதம் பாடக் கடவாய். [பாடுகிறான்] [வஸந்தகாலம்—மந்த மாருதம் வீசுகிறது. வழிப்போக்கனை வேட்டையாடுவதான விளையாட்டையுடையவனும், வஸந்த காலத்தை அநுபவிப்பதில் ஆவலுடையவனுமான மாருதனவன் மலய பர்வதத்திலிருந்து மெதுவாகக் கீழே இறங்கி வருகிறான்.]

ஸூத்ர:—ஆஹா! மிக்க ச்லாக்யம். ஸமயத்துக்குத் தக்க காநம். இக்கீதமானது வேட்டையாடச் சென்றிருக்கும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ஸேவிப்பதன் பொருட்டு அம்பர வீதியினின்று இறங்கிவரும் இந்த்ரனுக்கு நல்வரவு கூறும் கீதத்திற்கு மிகப் பொருத்தமாகவன்றோ இருக்கிறது! ஸரி

நல்லது. இனி நாம் மேற்கொண்டு செய்யவேண்டிய கார்ய க்ரமங்களை ஸித்தப் படுத்துவோம்,

[அனைவரும் திரைக்குள் செல்கின்றனர்.]

முன்னுரை முற்றிற்று.

முதல் அங்கம்—இரண்டாம் காட்சி.

[ரதத்தில் மஹேந்த்ரனும் ஸாரதி மாதலியும் இரங்கத்தில் தோன்றுகின்றனர்.]

மஹே:—அப்பா மாதலீ! ரதம் என்ன இவ்விதம் ஊர்கின்றதே; சற்று விரைவாகச் செல்லட்டும்; அத்யந்தம் அவஸரம். கருடாசாலத்தில் நித்ய வாஸம் செய்யும் சிங்கப்பிரானின் அபிகமந ஆராதந காலம் மீறிவிடும். ஆகவே அதற்குள் சென்று எம்பெருமானின் திவ்ய ஸேவையை ஸேவிக்க வேண்டும்.

[மாதலி லகானைப் பிடித்து இழுத்துக் குதிரையை வேகமாக ஓட்டுகிறான்.]

மஹே:—ஸாரதீ! குதிரைகள் காற்றினும் கனவேகமாய்ப் பறக்கின்றனவே! அடாடா! ஸாரத்யத்தில் உன் திறமையே திறமை! இவ்வேகத்தில் ப்ரக்ருதி தேவதையின்ஸௌந்தர்யம் தான் என்ன! இதோ பார் ஆகாயத்திலிருந்து தேவகங்கை ஓடிவரும் வேகத்தை. நம்முடன் கூடவே வழி நடப்பது போல் அன்றோ தோன்றுகிறது? அவள்மேல் மிதக்கும் நறுமணம் கமழும் பாரிஜாத புஷ்பத்தைப் பார்த்தாயா? நம்மைப் போலவே தேவ லோகத்திலிருந்து எம்பெருமானை ஆராதிக்கத் தீர்த்தமும் புஷ்பமும் கொண்டுவருகிறாள் போலும்! மற்றொரு ஆச்சர்யம் பார். நமது ஆகாய விமாநமானது அதிவேகமாய்க் கீழிறங்கி வரும்போது எத்தகைய விசித்ர தோற்ற மளிக்கிறது? பூதேவியானவள் நம்மை எதிர் கொண்டழைக்கத் தேவலோகத்தை நோக்கி விரைந்து வருவதுபோல் அல்லவோ தென்படுகிறாள்?

மாதலி:—ஆஹா! என்ன ஆச்சர்யம்! எவ்வளவு சீக்ரம் நாம் இறங்கியிருக்கிறோம்! சந்த்ர மண்டலம் ஸூர்ய மண்டலம் நக்ஷத்ர மண்டலம் அனைத்தையும் தாண்டி வந்து விட்டது நம் விமாநம்.

[ஸமீபத்தில் சுற்று முற்றும் நோக்கி]

மஹே:—என்ன அழகு! என்ன அழகு! நிலமங்கையின் ஸௌந்தர்யத்தைச் சற்றே கவனி. "அதோ எதிரில் காணப்படும் பர்வதங்கள் மரங்கள் நதிகள் இவைகளால் சூழப்பட்டுப் பூமியானது சில இடத்தில் குறுகியும் சில இடத்தில் விஸ்தாரமாயும் விளங்குவதைப் பார்த்தால், சிறியனவும் பெரியனவுமான பற்பல வேர்கள் விழுதுகள் விழுந்து ஆங்காங்கு சித்ர விசித்ரமாய்ப் பந்தல்போல் பரவி நிற்கும் ஓர் அழகிய பெரிய ஆலமரம்போல் அல்லவோ விளங்குகின்றது?"

மாதலி:—ப்ரபோ! இதென்ன அத்புதக் காட்சி! இவ்வடர்ந்த கானகத்தில் ஸகிகள் புடை சூழத் தோன்றும் இந்த ஸுந்தரி யாராயிருக்கலாம்? இவ்வநிதையின் ரூப லாவண்யங்கள் பூவுலகிற்கு அஸாதாரணமாக வல்லவோ தோன்றுகின்றன! இச்சௌந்தர்யவதி அம்பர தலத்தினின்று இறங்கி வந்த தேவதையோ? அல்லது நாக லோகத்திலிருந்து எழும்பி வந்த நாக கந்நிகையோ? சற்றே ஸரோவரத்தின் ஸமீபம் கவனித்துப் பார்க்கக் கடவீர்.

மஹே:—[அப்பக்கம் சற்றுக் கூர்ந்து நோக்கி, பழைய நினைவு வந்தவன் போல்] நண்பா! இவளை நான் அறிவேன். அது முன்னொரு கால் நடந்த விசித்ர சரிதம். எல்லாம் பகவத் லீலை. இப்பெண்மணி நீ நினைத்ததுபோல் தேவ கன்னிகை தான். மானிடப் பெண்ணுக்கு இத்தகைய ரூப லாவண்யங்கள் எங்கிருந்து தோன்றும்? அழகே உருவெடுத்த மண்ணில் தோன்றிய மின்னல் கொடி; நமது கந்தர்வ ராஜனின் புதல்வி. ஒரு ஸமயம் நமது அன்னை திருமாமகள் இட்ட ஶாபத்தின் பயன், இவள் இவ்வேடுவக் குலத்தில் உதிக்கு மாறு நேரிட்டது. அவளே தான் இக்கானகத்தில் உலாவுகிறாள்.

மாதலி:—[முகத்தில் கருணை ததும்ப] ப்ரபோ! இக்கந்நிகை புரிந்த குற்றம் தான் என்ன? கருணைக் கடலல்லவோ கமலா தேவி! அவள் திருவாக்கிலிருந்து இவ்வித திரஸ்காரமும் ஶாபமும் நேரிடவேண்டு மாகில், அது எத்தகைய மகதபசாரமாக இருத்தல் வேண்டும்? அதை அறிய என் உள்ளம் ஆவல் கொண்டுள்ளது. கூற வேண்டுகிறேன்.

மஹே:—ஸாரதி! கூறுகிறேன்; கேள். ஒரு ஸமயம் நமது லோகத்தில் மஹோத்ஸவம் ஒன்று நடந்தது. அதில் அநேக கீதம் நாட்யம் வாத்யம் முதலியவை முழங்கின. ஸ்ரீமந் நாராயணனும் லக்ஷ்மிதேவியும் ஸபையை அலங்கரித்திருந்தனர். இப்பெண்மணி அத்யச்புதமாய் ஆடிப் பாடி கந்தர்வக் கலையின் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்டாள். அதைக் கண்ணுற்று அன்னையின் திருவுள்ளம் பொங்கிப் பூரித்தது. கட்டுக் கடங்கா வியப்பும் களிப்பும் கொண்டாள் தேவி. அப்போது, அப்பெண்ணைப் பார்த்துத் தன் ஆநந்தத்தின் அறிகுறியாக ஏதாவது வரம் வேண்டுமாறு அருளினள். இப்பேதைப் பெண்ணோ சற்றும் தயங்காமல், 'தேவி! உன் நாதன் அஹோபிலேச்வரனையே நான் பதியாக அடைய விரும்புகிறேன்; அதைத் தவிர மற்றெதிலும் என் மனம் நாடவில்லை; அவ்வரத்தை அருளவேணும்' என்றாள்.

மாதலி:—[தனக்குள்] ஆஹா! இதென்ன அந்யாயம்! மஹத்தான அபசாரம் செய்தனளே பேதைப் பெண். [வெளிப்படையாக] பிறகு தேவி என்ன செய்தாள்? இக்குற்றத்தை அவள் ஸஹிப்பது எப்படி? அரிதினும் அரிதுதான்.

மஹே:—என்ன செய்வாள் தாய்! கருணையே உருவெடுத்த அவள் இட்ட ஶாபமும் அநுக்ரஹமாகவே முடிவுபெறும் அல்லவா? 'பேதைப்

பெண்ணே! என்ன உன் மதியீனம்! உன் ஸாஹஸம்தான் என்ன! என்னை வஞ்சித்து என் நாதனைக் காதலனாக அடைய வரம் வேண்டினாய் அல்லவா? வேடன், பக்ஷிகள் ம்ருகங்கள் முதலியவைகளை வஞ்சித்துக் கபடமாய் வலைபோட்டுப் பிடிப்பதுபோல், என்னை மயக்கி வரம் வேண்டினாய். இருக்கட்டும். ஆகையால் வஞ்சனை புரிவதே தொழிலாக உடைய வேடுவக் குலத்தில் பிறந்து உனது இச்சையைப் பெறுவாய்; ஆனால் இந்த ஜன்மத்தில் அடைவது அஸாத்யம். எனது வரம் எக்காலத்திலாவது பயனற்றுப் போனதுண்டோ?' என்று ஶாபமும் வரமும் ஒருங்கே அமையப் பகர்ந்தாள்.

மாதலி:—ஆஹா! இது அத்புதத்திலும் அத்புதம். திருமாமகளின் ஶாபம் வெகு ச்லாக்யம்! தாயின் வாக்கு ஏன் பலிக்காமல் போகும்? தேவியின் கருணைக்கும் பொறுமைக்கும் தக்க வரமே இது. தனக்குக் கொஞ்சமும் இஷ்ட மில்லாம லிருந்தும் மறு ஜன்மத்திலாவது இப்பெண்மணியின் மனோரதம் ஈடேறுமாறு அநுக்ரஹித்தா ளன்றோ தேவி! ஆம்; இப்பொழுது இவளேன் ஜந ஸஞ்சார மற்ற வநத்தில் இரு ஸகிகளுடன் இருக்கிறாள்? எங்குச் செல்வதாக உத்தேஶமோ?

மஹே:—நேசா! அதோ பார். அந்த ஸரோவரத்திற்கு வட பார்ச்வத்தில் ஓர் அழகிய ஆலயம் தென்படுகிறது. அதில் இவ்வந தேவதை கோயில் கொண்டிருக்கிறாள். அவள் அத்யத்புத ஶக்தி வாய்ந்தவள். அவளை இப்பெண் தன் மனோபீஷ்டம் நிறைவேறும்பொருட்டு ப்ரதிதினமும் பூஜித்து வேண்டுகிறாள். இப்பொழுதும் அங்குத்தான் செல்கிறாள்போல் தோன்றுகிறது.

மாதலி:—[எதிர்ப்பக்கம் நோக்கி மிகவும் வியப்புடன்] ஓஹோ! இதென்ன கோலாஹலம்! அத்யந்த ஸம்ப்ரமம்! இதோ தென்படும் போர்வீரர்கள் யார்? உருவிய கத்தியோடும், ஏந்திய வில்லோடும், நிறைந்த அம்பறாத் தூணியோடும், தாம் வேட்டையாடிக் கொன்ற ம்ருக பக்ஷிகளின் சடலங்களை முதுகில் தாங்கி இங்கும் அங்கும் ஓடுகின்றனர். திசையெங்கும் இவர்களின் பேரிரைச்சலின் எதிரொலியைக் கேட்டீர்க ளல்லவா? பக்ஷிகளும் மான்களும் பயந்து துள்ளிக் குதித்து வநம் முழுவதும் சுற்றித் திரிகின்றனவே.

மஹே:—[ஏதோ நினைத்துக்கொண்டவன்போல] ஆம்; நினைவு வந்தது; பகவான் சிங்கப்பிரான் வேட்டை யாடுவதன்பொருட்டு இவ்விடம் எழுந்தருளியிருப்பார். நேற்றைதினம் ஸாயம் பகவத் ஸேவைக்குப் போயிருந்தேனல்லவா? அப்பொழுது அவர் மைத்துனன் ஸுதாஹ்வானால் பாலிக்கப்படும் வந ப்ரதேசத்தில் பெருமாள் நாளை திநம் வேட்டைக்குச் செல்வதாக ப்ரஸ்தாபம் நடந்தது. அதே வநம் தான் இது. இப்பரிவாரங்கள் அவன் அடியார்கள் தான்.

மாதலி:—சரிதான்; அவ்விதமாகில் எம்பெருமான் இவ்விடத்தில் எங்கு எழுந்தருளியிருப்பார்?

மஹே:—அதோ தெரிகிறதே பர்வதம்; அதற்குப் பின் புறத்தில் குளிர்ந்த மலையருவி ஓடுகிறது. அதன் ஸமீபத்தில் அடர்ந்த கானகம் தெரிகிறது பார். அவ்விடம் ஒரு அசோக வ்ருக்ஷத்தின் நிழலில் பெருமாள் இளைப்பாறு கிறார். விதூஷகனும் கூடவே இருக்கிறான். ஆகையால் அஹோபிலேசன் வேட்டை விளையாட்டை முடித்துக்கொண்டு வருமளவும் நாம் இக்கருடாசலத் திலேயே அஹோபிலேசன் ஸேவையின் பொருட்டுத் தங்குவோம்.

[இருவரும் மறைகின்றனர்]

இரண்டாம் காட்சி முற்றிற்று.

மூன்றும் காட்சி

[அரங்கத்தில் கிராத வேடம் பூண்ட பகவானும் விதூஷகனும் தோன்றுகின்றனர்.]

விதூ: [விநோதத்துடன்] தேவா! இப்பொழுது காணப்படும் தங்கள் திவ்ய ஸேவையே ஸேவை. சற்றுக் கோணலாக ஒரு பக்கம் சாய்ந்து விளங் கும் கொண்டை; இடுப்பில் செருகிய கத்தி; முதுகில் கட்டிய அம்பறுத்தூணி; கையில் பிடித்திருக்கும் வில்; இத்தகைய தங்கள் வேஷம் என்ன அழகு! என்ன அழகு! முன்னொருகால் வேட்டுவ வேடம் பூண்ட மஹேச்வரனை யன்றோ நினைப் பூட்டுகிறது உங்கள் ஸேவை? ஆனால் ஒரே ஒரு குறைதான். தங்களுக் கும் ஈச்வரனைப்போல் ஒரு வேடுவப் பெண்தான் தேவை.

பகவான்:—[மனதிற்குள் நகைத்த வண்ணம்] நேசா! இருக்கட்டும் உனது பரிஹாஸப் பேச்சுக்கள். அதோ பார் ஒரு ஆச்சர்யம். அதோ ஓடும் மான்களுக்கு மிகுந்த தாஹம்; ஆகவே அருகிலிருக்கும் மாமரங்களிலிருந்து பெருகி வரும் தேனைப் பருகுவதன்பொருட்டு ஆவலுடன் அவை ஓடி வருகின் றன. ஆனால் என்னே அவைகளின் துரத்ருஷ்டம்? அம்மரத்தின் மேலிருக்கும் குரங்குகளின் நிழல் கீழே தென்படுகிறது. அதைக் கண்ணுற்ற பெண்மான் குட்டிகள் பயந்து தங்கள் தாஹத்தைத் தணித்துக் கொள்ளாமல் அதிவேக மாய்ப் பின் திரும்பிச் செல்லுகின்றன. அதோ பார் மற்றொரு வனக் காட்சி. அம்மரப் பொந்துகளில் காணப்படும் ஸர்ப்பங்களைப் பார். அவைகளின் விரிந்த படங்களில் மின்னலைப்போல் மின்னும் நாக ரத்னங்களையும், சுற்றிலும் பச்சைப் பசேரென்று விளங்கும் புன்கை மரங்களையும் கண்ட மயிலினங்கள், மின்னலும் நீருண்ட மேகமும் என அவைகளை நினைத்தன. ஆகையால் ஆநந்தம் மேலிட்டு அவ்வளவு கோலாஹலத்துடன் நாட்ய மாடுகின்றன பார்.

விதூ:—தேவா! நானும் சற்று இவ்வநத்தை வர்ணிக்கிறேன். இப்பூங் காவனத்திற்குத் தெற்குப் பக்கத்தி லுள்ள மூங்கில் காட்டைச் சற்றுக் கடா

க்ஷிக்கவேண்டும். அவைகள் மெதுவாக அசங்குவதினால் காற்று நிறைந்து எவ்வளவு இனிமையாக ராகம் பாடுகின்றன பாருங்கள்! மேலும் ஸங்கீத மாகிய அம்ருதத்தின் திவலைகள் போல் அம்மூங்கில்களினின்றும் முத்துக்கள் உதிர்வதைக் கண்டீர்களா?

பக:—நண்பா! பார்த்தேன், ஆம்; கண்ணுக் கினிய காட்சிதான். வந லக்ஷ்மியின் ஸௌந்தர்யமே ஸௌந்தர்யம். இதோ பார். எவ்வளவு பரிதாப மான காட்சி. காட்டுத்தீ பற்றி எரிகிறது. அதைக் கண்ட கவரி மான்கள் பயந்து உள்ளம் நடுங்கித் திக்குத் திசை தெரியாமல் அங்கும் இங்கும் ஓடி வருகின்றன. முடிவில் அதோ தென்படும் இருள் செறிந்த புதர்க்குள் அவை செல்லுகின்றன. ஐயோ பாவம்! அப்பேதை ம்ருகங்களுக்கு அங்கும் அடைக் கலம் அளிப்பவர் ஒருவரும் இல்லை. அம்மான்கள் அவ்விடமிருக்கும் கிழக் குள்ளநரியின் செந்தணலைப் போல் ஜ்வலிக்கும் கண்களைக் கண்டு உளம் நடுங்கிச் செல்லும் இடம் தெரியாமல் நடமாடுகின்றன.

விதூ:—[மேல் பக்கம் நோக்கி] ஸ்வாமி! இவ்விடம் மலை யடிவாரத்தில் தென்படும் குதிரை முகமுடைய புருஷர்கள் யாரோ தெரியவில்லையே!

பக:—அவர்களா? அவர்கள் கிந்நர கிம்புருஷர்கள். அவர்களுக்குக் குதிரை முகம் என்பதை நீ அறியாயா? தெய்வ உலகிலும் இத்தகைய வந ஸௌந்தர்யம் அரிதாகையால், இவர்கள் ப்ரதிதிநமும் இவ்விடம் வந்து இவ் வின்பத்தை அநுபவித்துச் செல்வது வழக்கம். ஆஹா! இவர்களது அத்ருஷ்டமே அத்ருஷ்டம். விலை கொடுக்காமல் எத்தகைய அலங்காரப் பொருள்கள் கிடைக்கின்றன!

ஸமீபத்தில் படர்ந்திருக்கும் கொடிகளின்மேல் மான்கள் படுத்துப் புரள் கின்றன. ஆகையால் அவைகள்மேல் இருக்கும் காத வழி கமழும் கஸ்தூரி, அக்கொடிகளின்மேல் படிந்திருக்கின்றது. அதை எடுத்து இக்கிந்நர புருஷர் கள் தங்கள் காதலிக்கு அழகிய திலக மிடுகின்றனர். மேலும் இக்கிந்நரப் பெண்கள் ஆங்காங்கு ஸர்ப்பங்களால் கக்கப்பட்டிருக்கும் நாக ரத்நங்களை எடுத்து மாலைகளாகக் கோத்துத் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர். நாமும் இவ்வழியே சென்று இவ்வழகிய காட்சிகளைக் கண்டு களிப்போம்.

[ஐந்து ஆறடி சென்று]

விதூ:—ப்ரபோ! இவ்வநத்தின் அழகைச் சற்றுக் கடாக்ஷிக்க வேண் டும். முன்பு நாம் கடந்து வந்ததை காட்டிலும் இது மிக்க ரமணீயமான சோலை. பூத்துச் சொரியும் பற்பல புஷ்பங்களும், பழுத்துக் குலுங்கும் சுவை மிக்க பழங்களும் புனைந்த செடி கொடிகளின் அழகே அழகு.

பக:—[நன்றாகக் கூர்ந்து பார்த்து] ஆம்; இந்நந்தவநம் கண்ணையும் கருத்தையும் ஒருமிக்க வன்றோ கவர்கின்றது! எங்கும் பரவி நிற்கும் புதிதாய்

மலர்ந்த புஷ்பங்களின் பரிமளம், மன்மதனின் வாத்யம் போன்ற குயில்களின் மதுர ஸ்வரம், இவைகள் எவர்கள் உள்ளத்தைத்தான் பரவசமாக்கமாட்டா? முற்றத் துறந்த முனிவர்களும் இதனைக் காணின் சற்று மயங்குவர்.

[மறுபடியும் மற்றொரு பக்கம் திரும்பி ஏதோ நற்சகுனத்தைக் கண்ட ஸந்தோஷத்துடன்]

அப்பா! நண்பா? இதென்ன ஆச்சர்யம்? இதுவோ அடர்ந்த கானகம். ஸதா கொடிய ம்ருகங்கள் குடியிருக்கு மிடம். இவ்விடத்தில் ஏதாவது நன்மை உண்டாகுமென்று எண்ணுவதற்குத்தான் கனவிலும் இட முண்டோ? ஆனால் எனது வலது கண் ஏனோ துடிக்கின்றதே. பகவத் ஸங்கல்பம் இருந்தால் நிச்சயமாய் இவ்விடத்திலும் ஏதாகிலும் நன்மை உண்டாகலாம்.

விதூ:—ஆம்; அதற்கென்ன ஸந்தேஹம். லக்ஷ்மி கடாக்ஷம் இருந்தால் இக்கானகத்திலும் தங்களுக்கு ஏதேனும் நல்ல லாபம் கிடைக்கலாம். ‘கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்தாகிலும் கொடுக்கும்’ என்பதல்லவா பழமொழி.

பக:—[ஸமீபத்தில் உற்றுப் பார்த்து] இதோ தென்படும் இக் கதம்ப வந மத்யத்தில் மெருகிட்டுப் பளபளவென்று மின்னும் தங்க த்வஜத்தையும் அதன் மேல் பறக்கும் கொடியையும் பார்த்தால், அங்கே ஒரு கோயில் இருப்பதாக எண்ணுகிறேன். ஆம்! அதோ ஒரு ஆலயம் தென்படுகிறதே. அது அநேகமாய் இவ்வந தேவதையின் வாஸஸ்தலமாகவே இருக்கலாம் என்று ஊஹிக்கிறேன். அதோ பார் கோபுரத்தைச் சுற்றிலு மிருக்கிற சித்ரப் பதுமைகளை. அவைகள் தேவதைகளுக்கும் அஸுரர்களுக்கும் ஸதா நடக்கும் யுத்தத்தின் விமர்சையை எவ்வளவு நேர்த்தியாய் எடுத்துக் காட்டுகின்றன. ஆஹா! எழுதியவன் கைதேர்ந்த சித்ரக்காரனா யிருக்கவேணும். நேரில் நடப்பதைப் போல் அல்லவோ தோன்றுகிறது? மேலும் இது ஆலயமேதான் என்பதை இக்கிளிகளின் கொஞ்சும் மொழிகளினால் நன்றாக அறிகிறோம். அவைகள் என்ன பேசுகின்றன என்பதைச் சற்று உற்றுக் கேட்போம். இங்கு ப்ரதிதினம் பக்தர்கள் தேவியை ஸேவிக்க வருகிறார்க ளல்லவா? அவர்கள் ஸ்துதியைக் கேட்டுத் தாங்களும் ‘தேவி! பகவதி! காத்யாயிநீ! நமோஸ்துதே’ என்று சொல்லுகின்றன. சரி. தேவாலயத்தின் ஸமீபம் சென்று சித்ரம் முழுவதையும் கவனித்துப் பார்ப்போம்.

விதூ:—ஆம்; சீக்ரம் செல்வோம். அநேகமாய் இப்போது தேவியின் நைவேத்ய ஸமயமா யிருக்கலாம். நமக்கும் ஒரு கற்கண்டுத் துண்டோ அல்லது பழமோ ப்ரஸாதம் கிடைக்கும். [இருவரும் வேகமாய்க் கோயில் ஸமீபம் செல்லுகின்றனர்.]

பகவா:—நண்பா! ஸதா உண்பதிலேயே எண்ணமா?

189243
SCANNE